மாதர்மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XII.	Madras: March 1910.	No-3.
புத்தகம் - கஉ.	சென்னப்பட்டணம்: மார்ச்சுமீ 1910.	இலக்கம்-3.

பாக்கியமுள்ள பர்மீயர்.

—:o:—

நம் இந்தியாவுக்கு அடுத்த கிழக்கே பர்மா என்று ஒருதேசம் இருக்கிறது. நம் தேசத்தைப் போலவே அதுவும் உஷ்ணமானது. அதை நமது சக்கரவர்த்தி எ-வது எட்வர்ட் அவர்கள் செவ்வனே ஆண்டு வருகிறார்கள்.

அந்த தேசத்தின் உட்பாகங்களில், நல்ல பாதைகள் அனேகம் இல்லை. ஆனால் திரும்பிய பக்கம் எல்லாம் பெரிய பெரிய, ஆறுகள் ஓடுவதைக் காணலாம். அந்த நதிகளில் சிறியதும், பெரியதும் ஆன, படவுகள்போவதும், வருவதுமாக இருக்கும். அவற்றில் ஏறித்தான் ஜனங்கள் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குப் போவார்கள். அந்த நதிகளின் ஜலத்தை வயல்களுக்குப் பாய்ச்சி, நல்ல நெல் விளைவிப்பதே பர்மா தேசத்தாருடைய முக்கியதொழில். ஆனதினால் பர்மீயர்களில் பெரும்பாலர் நதிகளின் கரை ஓரங்களிலேயே குடியிருக்கிறார்கள். இப்படி வேளாண்மையே முக்கிய தொழிலாக இருக்கும் தேசத்தில் பெரிய நகரங்கள் அனேகமாய் இருக்கமாட்டா அல்லவா? ஆகையால் பர்மாவும், நம் தேசத்தைப்போல், சிறு, சிறு, கிராமங்கள் அனேகம் சேர்ந்த ஒருதேசம்.

பர்மாவில் மழைமிகுதி. மாரிகாலத்தில் அனுதினமும், ஓயாமல் கனத்த மழை பெய்யும். வருடத்தில் ஆறுமாதம் விடாமல் மழைபெய்கிறது. நதிகளில் இரண்டு மூன்று மாதத்திற்கு நீங்காத பிரவாஹம்வந்துகொண்டிருக்கும். அது வெகுநாள் கரைபுரளும்; ஆதலால், அந்த ஆற்றோரங்களில் தாங்கள் கட்டும் வீடுகளை வெள்ளம் அடித்துக் கொண்டு போகாதபடி பர்மீயர் அவைகளை உயரமான தூண்களின்மேல் கட்டுவார்கள். அப்படிகட்டும் வீடுகளும் அதிக பாரமாயிராதபடி, அவற்றின் ஜன்னல், மேல்கோப்பு முதலியவைகளை அங்கே ஏராளமாய் அகப்படும் மூங்கிலால்செய்து அமைப்பார்கள். அங்கே இரும்பு ஆணி அடிப்பதில்லை. கயிற்றால் தான் வரிவார்கள். அந்த வீட்டிற்குள் போவதற்கு ஏணி ஒன்று வைத்தாகவேண்டும்.

28 APR 1910

இப்படிப்பட்ட வீடுகளில் இருந்துகொண்டு, மழை மிகுதியாலும், ஆற்றுப்பெருக்காலும், ஏராளமாய் விளையும் நெல்லை உண்டு வெகு உல்லாசமாய் இருப்பார்கள். பர்மீயர் தாங்கள் பெற்ற குழந்தைகளை, தொட்டிலில் இட்டு தாலாட்டும் சொல்லிப் பாராட்டுவார்கள். அத்தொட்டிலும் மூங்கிலால்தான் செய்யப்பட்டிருக்கும். அதன் ஓரங்களில் பட்டைச் சுற்றிவைப்பார்கள். இந்தத் தொட்டிலை, பெண்கள் மாத்திரமே அல்லாமல் ஆண்களும் ஆட்டுவது உண்டு. இப்படி பர்மீயர்கள், தங்கள் குழந்தைகளை, வெகு அருமையாய்ப் போற்றி வளர்ப்பார்கள். அவர்கள் மிகுந்த சந்தோஷப்படும் காலம் ஓடி, ஆடித் திரியக் கூடிய குழந்தைப் பருவமே. அப்போது அவர்கள் வீட்டிற்கு முன்னால் தரையில் விளையாடுவார்கள். அவர்களுக்கு ஆற்றோரம் போக வெகு பிரியம்; ஒருக்கால், குழந்தை ஒன்று தண்ணீரில் தவறி விழுந்து விட்டால், தாயோ, தகப்பனோ, பாட்டனோ, யாரோ பக்கத்தில் உள்ளவர் நீரில் மூழ்கி, அதைப் பத்திரமாய் எடுத்து விடுவார். இதற்காக வேண்டியே குழந்தை தானே நடந்துபோகச் சக்திஉண்டானதும் அதற்கு நீந்தக் கத்துக் கொடுத்து விடுவார்கள். அதனால் பர்மீயரில் நீந்தத் தெரியாதவர் இல்லை.

இப்படி, ஆனந்தப்படும் பர்மீயர்களின் ஆட்டம்என்ன! பாட்டம்என்ன! முக்கியமாய், இவை சிறுவர்களிடம் வெகு அதிகம். நம் சிறுவர்களைப்போலவே அவர்களும் பம்பரம் ஆட்டு வார்கள்; பட்டம் பறக்க விடுவார்கள், உதைபந்து முதலிய பந்து ஆட்டமும் ஆடுவார்கள். சிறுவர்கள் இப்படி விளையாடிக் கொண்டிருப்பதை, பெரியோர்கள் மனமகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டிருப்பார்கள். சிறுவர்களை, தங்கள் தங்கள் இஷ்டம்போல விளையாட விட்டு, வேடிக்கை பார்ப்பதே பெரியோர்களுக்கு மிக்க களிப்பு. பர்மீயப் பெரியவர்களுக்கு இதைக் காட்டிலும் அதிக சந்தோஷ கரமானது வேறொன்று கிடையாது. இம்மட்டா? சிலர் பெரியவர்களானாலும் சரி, சிறுவர்களுடன் சேர்ந்து, எந்த விளையாட்டிலும் ஆனந்தம் அடைவார்கள். வேறு எதிலும் விட, படகு ஓட்டுவதில் பெரிய பந்தயம் போடுவார்கள்—எல்லாவற்றிலும் இது வெகு அவசியமானது. ஆதலால்! இப்படிக்கெல்லாம் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடும் பெரியவர்கள் தங்கள் வாலிபர்களுக்கு பாலியத்திலிருந்தே சுத்த வீரத்தனத்தைக் கற்றுவரச் செய்கிறார்கள். சிறுவர்களும் கஷ்ட நிஷ்டூரங்களை வெகு பொறுமையாய்ச் சகிக்க வேண்டும்; அழப்படாதாம்.

இந்த ஆட்டம் போடுகிற பர்மீயரும் நம்மைப்போல படிப்பில் சிரத்தை அற்றவர்களாகவே இருந்து வருகிறார்கள். பையன்களில் பெரும்பான்மையாரும்—எல்லாரும் அல்ல பெண்களில் சிலரும்—பெரும்பாலார் அல்ல, பள்ளிக்கூடம் போவார்கள். அதிகம் படிப்பதில்லை. எழுதப் படிக்கத் தெரிந்தாலே போதும்.

என்றாலும் நம்மைவிட பர்மீயர் படிப்பில்அதிகரித்த்வர்களாகவே இருக்கிறார்கள். இது விஷயமான கணக்கு பின்வருமாறு:—நம்மில்,100-க்கு10-புருஷர்களும் 146-க்கு, ஒரு ஸ்திரீயும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள். பர்மீயரிலோ, 100-க்கு 49-புருஷரும் 100-க்கு 21-ஸ்திரீகளும் எண்ண, எழுத, தெரிந்தவர்களாய் இருக்கிறார்கள். பின்னும், சென்ற

1905ம்-வருஷத்தோடு முடிவாகிற பத்து வருஷத்திற்குள் பெண்பாடசாலைகள் 242-லிருந்து 649 க்கும், அவற்றில் படித்த பெண்பிள்ளைகளின் சங்கை 9869-லிருந்து 56787-க்கும் ஆக அதிகரித்தன. இதுவும் அல்லாமல் அனேக வாலிபர்கள் பர்மாவிலிருந்து இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டுகளுக்கும் போய்ப் படிக்கிறார்கள். இப்போது 77-பர்மீய மாணாக்கர்கள், இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டுகளில் இருக்கிறார்கள். அவர்களில் 39-பேர் லண்டன் மாநகரத்தில் குடியாயுள்ளார்கள். 52-பேர் சட்டம், 5-பேர் என்ஜினீரிங், 3-பேர் வைத்தியம்—ஆக உயர்தரப் படிப்பிலும் விருத்தியடைந்து வருகிறார்கள். இப்போது படிப்பில் நாம் எங்கே! பர்மீயர் எங்கே!

பர்மீய கன்னிகள் வெகு அழகுள்ளவர்கள். அதிக உல்லாசமானவர்களும் தாம். மேலும் மிக்க சுதந்தரம் உள்ளவர்கள். பர்மீய ஸ்திரீகளைப் போல், சுகப்படுகிறவர்களும் சுதந்தரம் உடையவர்களும் ஸ்திரீ ஜாதியிலேயே இல்லை. பர்மீய சிறுவர்களைப்போல் சிரித்து நிர்விசாரமாய்க் களித்து விளையாடுகிறவர்களும் இல்லை. பர்மீயரின் பாக்கியமே பாக்கியம்!

சர்வஜித்.

22-வது அத்தியாயம்.

மறுநாள் புஷ்யமித்திரரும் அநங்கரும் தனித்திருந்த சமயத்தில், தனது மனதிலுள்ளதை வெளியிடக் கருதிய புஷ்யமித்திரர் அநங்ககிரி பிரபுவைப் பார்த்து, “பிரபுவே, தங்களிடத்தில் ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்துப்பேச எண்ணங்கொண்டிருக்கிறேன். ஆயினும், அது தங்களுக்கு வருத்தத்தையுண்டு பண்ணுமோவென்று தயங்குகிறேன்” என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்ட அநங்கன் திடுக்கிட்டு, “என்ன சமாசாரம்? உங்கள் மனதிலிருக்கிறதென்ன? ஒளிக்காமல் சொல்லுங்கள்” என்றான்.

“நாம் ஏற்பாடு செய்திருக்கிற விவாஹத்தைக்குறித்துப்பேசவந்தேன். இப்பொழுது லீலாவதி யடைந்திருக்கிற துக்கத்தை தாங்கள் அறியக்கூடும். இச்சமயத்தில் அவள் மனதை அதிகப் புண்செய்யாமல் இருத்தல் நமது கடமை—” என்று சொல்லப்போக, அநங்கன், “தெளிவான பேச்சில் தாங்கள் சொல்வதுயாதெனில் இவ்விவாஹத்தை நடத்தாமலே நிறுத்திவிட வேண்டுமென்பது” என்று மஹா அதிருப்தியைக் காட்டினகுரலுடன் சொன்னான். அதற்கவர், “நான் வாக்குமீறி நடப்பதாகத் தாங்கள் எண்ணக்கூடாது. இவ்விஷயத்தில் தங்களது தயாளத்தைக் காட்டும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். என் பெண்ணை இஷ்டமின்றித் தங்களைக் கல்யாணஞ் செய்துகொள்ள பலவந்தஞ்செய்வது இப்பொழுது அவளது ஹிருதயத்தைப் புண்செய்துகொண்டிருக்கிற பல ஈட்டிகளோடு மற்றொரு ஈட்டியைச்

சேர்ப்பதாகும்" என்றார். இவ்வார்த்தைகளுக்கு அநங்கன் மறுமொழியாக, புஷ்யமித்திரர் தன் பெண்ணின் வருத்தத்தை மாத்திரம் கவனித்தாரே யொழிய, தனது வருத்தத்தைச்சிறிதும் கவனிக்கவில்லையென்றும், இக்காரியத்தை புஷ்யமித்திரரே யாரம்பித்து, அமராபுரியிலிருந்த தன்னை அங்கு வரச்செய்து, தனக்கும் லீலாவதிக்கும் விவாஹம் நடக்கிறதாக எங்கிலும் முழக்கஞ்செய்துவிட்டு அதை இப்பொழுது நிறுத்தும்படி கேட்பது நியாயமல்லாமலிருப்பதுடன் கூட தனக்கு மிக்க அவமானத்தைக்கொண்டு வருமென்றும், ஆயினும், புஷ்யமித்திரர் கேட்டுக் கொண்டதற்காக லீலாவதியின் தமையன் இறந்து விட்ட காரணத்தைக்கொண்டு, கலியாணத்தை ஆறு மாதம் தள்ளிப்போட்டுக்கொள்ள இஷ்டப்பட்டதாகவும், அதைமுற்றிலும் நிறுத்திவிடுவது தனக்குக் கொஞ்சமேனும் சம்மதமில்லையென்றும் சொன்னார். இதைக்கேட்ட புஷ்யமித்திரர் வருத்தத்துடன் தனது வாக்கை நிறைவேற்றும்படி கட்டாயப்படுத்துவது ஒரு இளம்பெண்ணின் வாழ்நாட்களை சந்தோஷமில்லாமற் செய்வதாகுமென்று மன்றாடவே, அநங்கன், "தங்களுடையபெண் என்னைக் கலியாணஞ்செய்வதில் வெல்லமுடியாத ஆக்ஷேபணைகளென்னவென்பதை அவளது வாயைக்கொண்டே அறிய விரும்புகிறேன். ஆகையால் தங்கள் பெண்ணோடு சற்றுநேரம் பேச அநுமதி தரவேணும்," என்றான்.

"தாங்கள் சொல்வது நியாயமே. இதோ நான் அவளைக் கூட்டி வருகிறேன். தங்களைக் கேட்டுக்கொள்வது யாதெனில், அவள் சம்மதித்தால், நான் சொன்ன வாக்கை நிறைவேற்றிவிடுகிறேன். அவளுக்குச் சம்மதமில்லாவிடில், என்னுடைய வாக்கிலிருந்து என்னை விடுவிக்கவேண்டியது;" என்று புஷ்யமித்திரர் கேட்டுக்கொள்ள, அநங்கனும் அப்படியே ஆகுக என்றான். புஷ்யமித்திரரும் பெண்ணிடத்தில் வந்து நடந்ததைச் சொல்லி, தன் மனதின் சம்மதத்தை அநங்கனிடம் ஒளிக்காமல் வெளியிடும்படி சொல்லவே, லீலாவதி "பிதாவே, எனது அபிப்பிராயம் தங்களுக்குத் தெரிந்ததுதான். அதையேதான் நானும் தெரிவிக்கப்போகிறேன்" எனவே, தகப்பன் "உனது அபிப்பிராயம் எதுவாயிருந்தாலும் என்னிடமதை இப்போது சொல்லவேண்டாம். நான் நடுத்தரமாயிருந்து உன்னைப் பிரபு அநங்கரிடம் கூட்டிச் செல்லுகிறேன். பயப்படாமல் உனது சம்மதத்தையோ அல்லது அசம்மதத்தையோ அவருக்கு நேரே வெளியிடு" என்று சொல்லி அவளை அநங்கனிடம் இட்டுக்கொண்டுபோய், அவளை அங்கு உட்காரவைத்துவிட்டு, தான் கொஞ்சநேரத்திற்கெல்லாம் அவர்களுடைய பேச்சின் முடிவை யறிய வருவதாகச்சொல்லி வெளியே போய்விட்டார்.

இப்படி ஒருமணிநேரம் வெளியே உலாவிவிட்டு, இதற்குள் பேச்சு முடிவடைந் திருக்கக்கூடுமென்றெண்ணி, புஷ்யமித்திரர் அநங்கனிடம் வந்தார். அப்பொழுது லீலாவதியுமிருந்தாள். அநங்கன் சிரித்தமுகத்துடன், "சீமாட்டி சம்மதித்தாளென்று சொல்லச் சந்தோஷிக்கிறேன்" என்றான். இதைக்கேட்ட புஷ்யமித்திரர் திகைத்துப்போய் லீலாவதியைப் பார்த்தார். அவளோ முகம் வெளுத்து அசைவற்று நின்றாள். "அவள் வாயைக்கொண்டே நான அவள் சமமதத்தை யறியவேண்டும்" என்றார் புஷ்யமித்திரர். உடனே அநங்கன், "சீமாட்டி லீலாவதி, உன் வாயைக்கொண்டே உன் சம்மதத்தை யறியவேண்டுமென்று உன் தகப்பனர் சொல்வது காதிற்படவில்

MADRAS.

லையா?'' வென்று கேட்க, அவளும் சொப்பனத்திலிருந்து திடுக்கிட்டு விழித்துக்கொண்டவள்போலும், திக்பிரமை கொண்டவள்போலும் தகப்பனை இரண்டுமூன்று தடவைகள் விழித்துப் பார்த்துவிட்டு, அவள் புத்தி சற்றும் அவ்விடத்தில் இல்லையெனக் காட்டும்படி, தடுமாற்றத்துடன் "ஆம்—அப்படியேதான்—என்னைக் கேட்டுக்கொள்வது இன்னதெனத் தெரியும்—நான் சம்மதித்தேன்'' என்றாள்.

"உண்மையாய் சம்மதித்தாயா?'' என்று புஷ்யமித்திரர் மறுபடியும் வற்புறுத்திக் கேட்க, தான் சம்மதித்ததாக உறுதியாகச் சொன்னாள். மனதிலுள்ள சந்தேகம் நீங்காமல், இப்படி லீலாவதி எதிர்பாராத விடை யளித்தது என்ன மாயமோவென்று ஒன்றுந் தோன்றாமல் புஷ்யமித்திரர் திகைத்து நிற்கையில், அநங்கன் அவரைப் பார்த்து, "பிரபுவே, லீலாவதியின் சம்மதத்தைக் குறித்துச் சந்தேகம் நீங்கிற்றா?'' என்று கேட்க, அவர் "இனி நான் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. என் வாக்கை நிறைவேற்றி விடுகிறேன்'' என்றார். இதற்குப் பிறகு லீலாவதி அவ்விருவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு தன்னறை சென்றாள்.

23-வது அத்தியாயம்.

அநந்தகிரிக்கு சுமார் ஆறு ஏழு மைல்களுக்கப்பால் தென்கிழக்கில் மலையதிபதிகளின் கோட்டை யிருந்தது. இக்கோட்டை செங்குத்தான பாறைகளின்மேல் கட்டப்பட் டிருந்ததுடன்கூட, கற்களில் வெட்டப்பட்ட ஒரு சிறு பாதையைத் தவிர உள்ளே செல்வதற்கு வேறெவ்வழியையும் உடைத்தாகாமலிருந்தது. சத்துருக்களால் பிடிபட முடியாத இக்கோட்டையில் காட்டுத்தலைவர்கள் கவலையற்றுக் காலத்தைக் கழித்துவந்தார்கள். பக்கத்தூரிலுள்ள ஆடுமாடுகளைக் கொள்ளையாடுவதும், தங்களுக்கு தீங்கு வருமெனத் தோன்றினால், கோட்டைக் கதவுகளைச் சாத்திக்கொண்டு எதிரிகளாலானதைப் பார்க்கட்டுமென்று வீரம்பேசி விசாரமில்லாமல் உண்பதும் உறங்குவதுமா யிருந்தார்கள்.

இப்படிப்பட்ட கோட்டையின் அறைகளொன்றில் நமது காட்டுஸ்திரீ உட்கார்ந்திருந்தாள். இப்பொழுது விடியற்காலஞ் சென்று மணி ஒன்பது. இராத்திரி நன்றாய்த் தூங்கியதால் சிரமம் நீங்கினவளாய், அம்மலைக் கோட்டையைச் சுற்றிப் பார்க்க எண்ணங்கொண்டு எழுந்து, அறையறையாய்ச் சென்று பார்த்துக்கொண்டு வரும்போது, எவ்விடத்திலோ சங்கிலிகளை யசைத்த சப்தங் கேட்டது. சில அடிகள் முன்செல்ல, கீழே கொண்டுபோய் விடுகிற மச்சுப் படிக்கட்டுகளைக் கண்டாள். இரண்டுமூன்று படிகள்வரையிற்றான் வெளிச்சந் தெரிந்தது. அதற்குக் கீழே கண்களின் பார்வைகள் செல்லமுடியாதபடி இருள்சூழ்ந்திருந்தது. இப்படிப்பார்த்து நிற்கும்போது கீழே இருவர் சச்சரவு செய்கிற இரைச்சல் கேட்டது. சில நிமிஷங்களுக்கெல்லாம் யாரோ ஒருவன் மச்சுப்படி யேறிவருவதை யறிந்து, அங்கு நிற்க மனங்கொள்ளாமல், விரைந்து தன்னிருப்பிடம் போய்விட்டாள்.

ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி.ஏ.

நரேந்திரபுர நங்கை.

விநாயகர் துதி.

நேரிசை வெண்பா.

சீரார் திரைகடல்சூழ் தேசமதிற் செந்தமிழால்
நாரார் நரேந்திரபுர நங்கையர்தம்—பேரார்
திகழ்சரிதஞ் செப்புதற்குத் தினந்தினமுஞ் சிந்தையே
புகர்மா முகவனடி போற்று.

முதலத்தியாயம்.

பார்வதியின் பிரிவு.

நம் கதாநாயகி சத்திய புரியிற் பிறந்து, சுமார் பனிரெண்டு வருஷம் அங்கு வளர்ந்தபோதிலும் அவளது நற்குண நற்செய்கைகள் யாவும் வெளிப்பட்ட இடம் நரேந்திரபுர மாதலால் நங்கதை இப்பெயர் பூண்டது.

முன்னொரு காலத்தில் விந்திய மலைக்குத் தெற்கே வெகு தூரத்தில் நரேந்திரபுரமென்ற ஒரு பட்டணமிருந்தது. இதில் **வீரவன்மன்** என்ற ஓர் அரசன் செங்கோல் செலுத்திக்கொண்டிருந்தான். இந்நகருக்கு சுமார் எழுபது கல்தூரத்தில் முத்தூரென்னும் சிறுகிராமமொன்றுண்டு. இக்கிராமத்தில் ஒரே ஒரு பிராமணன் சத்திரம் வைத்திருந்தனன். மேற்சொன்ன நகருக்குக் கிழக்கே **சத்தியபுரி** என்ற ஒரு நகரமிராநின்றது. இந்நகரத்தை, வீரவன்மனுக்கு பகுதி கட்டி வந்த சிற்றரசனொருவன் ஆண்டுவந்தான். சத்தியபுரியிலிருந்து முத்தூருக்குப் போகவேண்டியதாயிருந்தால் **சண்பகாவதி** என்னும் நதியைக் கடந்துபோகவேண்டும். இதுவோ அதிக அகலமாயும், ஆழமாயும் எக்காலத்திலும் வற்றாத ஜீவநதியாயுமிருந்தது. இதில் வருஷ முழுவதும் படகுகளநேகம் போய்க்கொண்டிருக்கும். நரேந்திரபுரத்திலும் சத்தியபுரியிலும் அநேக காடுகளிருந்தன.

ஒருநாள் காலை சத்தியபுரியிலுள்ள சண்பகாவதி நதிக் கருகாமையிலிருந்த கானகமொன்றில், "ஆ! காற்று எவ்வளவு—(திடுக்கிட்டு) ஐயையோ! என்னசெய்வேன்! என்னை அநியாயமாய் எனது தகப்பனாரிடமிருந்து பிரித்துவிட்டவன் யாவனோ தெரியவில்லையே! சீ! நாம் கனவு காண்கிறோமோ அல்லது இது உண்மையோ! கனவல்ல! உண்மைதான்; என் தந்தையிடமிருக்கும் அபரிமிதமான திரவியங்களை அபகரிப்பதற்காக எந்தப் படுபாவிசெய்த சூழ்ச்சியோ—(தன்னெதிரிலிருக்கும் சண்பகாவதி நதியைக் கண்ணுற்று) ஐயோ! இப்பயங்கரமான நதியிலிருந்து வருகின்ற குளிர்ந்த காற்றின் சப்தமோ என்னை முற்றிலும் பயப்படுத்திவிடுகின்றது! என்ன செய்வேன் தெய்வமே!" என்று சுமார் பதின்மூன்று வயதுள்ள ஒருபெண் ஆலமரமொன்றின் நிழலிலுட்கார்ந்து, வலதுகையை முழங்காலிலூன்றி தனது கன்னத்

தில் வைத்து அதிக துக்கப்பட்டுக்கொண் டிருந்தனள். இவளது இயற்கை மணங் கமிழ் கறுத்த கூந்தலவிழ்ந்து தரையிற் புரண்டது. இவள் வேல் போன்ற விழிகளிலிருந்து கண்ணீர் கலகலவென்று தரையில் வீழ்ந்தது. இவள் பூங்கொடியை யொத்த இடையோ துவண்டது. கைகால்கள் நடுங் கின. மூர்ச்சித்து வீழ்ந்தனள்.

இச்சமயத்தில், சுமார் இருபது வயதுள்ள வாலிபனொருவன் இவளை நோக்கி வந்துகொண்டிருந்தான். இவன் இவளிடம்வருவதற்குள், இச்சுந்தரி யும் மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்தனள்.

இவனிவளிடம் வந்து, "அம்மா பார்வதி! என்னை நீ சீக்கிரமாகப்பின் செல்" என்றான்.

பார்வதி:—"அடா இராமா! நீயா என்னை இங்கு கொண்டுவந்து விட் டாய்—என்தந்தை எங்கே? அருமையாக வளர்த்த என் தகப்பனார் என்னைக் காணுவிடில் அவர் உயிர் துறப்பரே என்ன செய்வேன்!"

இராமன்:—"என்ன செய்வது, உன் தலைவிதி. உன் சிற்றப்பன் தான் உன்னைக்கொன்று போடச்சொல்லி, அதற்காக அவர் கொடுத்த ஐம்பது ரூபாய் இதோபார். நானோ உன்னைக் கொல்லத் துணியாமல் நீ தப்பிப்பிழைக் கச்செய்கிறேன். அம்மா பார்வதி! பயப்படாதே. கடவுளுனக் கருள்புரி வார்."

பார்வதி:—"இராமா, நீ என்னை என் தகப்பனாரிடங்கொண்டு போய் விட்டால் என் சிற்றப்பனைத் தகுந்தபடி தண்டித்து, உனக்கு உன் ஜீவகால பரியந்தம் அன்னமளித்து, துணி முதலியவை வாங்கிக்கொடுக்கும்படி செய் கிறேன். என் பேச்சை நம்பு".

இராமன்:—"பார்வதி அப்படியல்ல; நம்பினவரை மோசஞ் செய்வது என் குலத்திற்கு அழகல்ல. ஆதலால், நீ உன் தகப்பன் முகத்தைக் காண்பது முடவன் "கொம்புத்தேனுக் காசைப்பட்டதுபோலாகும்" இனி இவ்வெண் ணத்தை நீ மனத்தில் வையாதே". *

பார்வதி:—"நீ, நம்பினவரை மோசஞ்செய்வது உன் குலத்திற் கழல்ல என்று சொன்னையல்லவா? அப்படியே இருக்கட்டும்; நீ இப்பொழுது உன்னை நம்பி யிருந்த என் தந்தையை † மோசஞ்செய்வது உனக்கு நியாய மாகத் தோன்றுகிறதா? எல்லாம் பணஞ் செய்யுங் வேலை".

இராமன்:—"ஆமாம்! அதற்கென்ன தடை, இவ்வுலகில் பணமில்லாத வன் நடைபிணத்திற்குச் சமானமாவான். பொருளில்லாதவனுக் கிவ்வுலகில்

* இவனிப்படிச் சொன்னதற்குக் காரணம் பின்வருமாறு; "நான் இவளை இவள் தகப்பனிடமழைத்துப்போனால், நான் செய்த தப்பிதத்திற்கு தகுந்த தண்டனை விதிப்பானே யன்றி எனக்குப் பரிசு கொடுக்கப்போகிறதில்லை" என்று எண்ணினான்.

† ஏனெனில், இராமன், பார்வதியின் தந்தை. சிவநேச முதலியாருக்கும், இராம நாதனுக்கும் பொதுவான வேலையாள்.

சுகமே இல்லை. "பணமென்றால் பிணமும் வாயைத்திறக்கும்" என்ற பழமொழியை புத்திசாலியான நீ அறியாயோ?"

பார்வதி:—"இப்படி ஒரு பெண்ணை அவன் தகப்பனிடமிருந்து பிரித்து வயிறு வளர்ப்பதைக் காட்டிலும்,

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்".

என்று திருவள்ளுவர் கூறியபடி, நீ என் பிதாவைக்கேட்டு அவரிடத்திலிருக்கின்ற நிலங்களிலொருபாகம் வருஷத்திற்கு கட்டண மிவ்வளவு கொடுக்கிறேனென்று சொல்லி வாங்கி அந்நிலத்தை உழுது பயிரிட்டு சாப்பிடுவது உத்தமமல்லவா!" என்று சொல்லி சிறிதுநேரம் யாதோ யோசித்துக்கொண்டிருந்தாள்.

இராமன் இவளிருக்குந் தன்மையைப் பார்த்து நகைத்தான்.

இதைக்கண்ட பார்வதி:—"ஆ! ஜெகதீசா: இவனுமென்னைப்பார்த்து சிரிக்கும்படியான ஸ்திதியில் வைத்தாயே, எல்லாம் உன்னருள்" என்று தன் மனத்தில் நினைத்து, "அடா இராமா! உனக்கு ஈசன் பார்த்து தான் கூலிகொடுக்கவேண்டும்" என்று கோபத்தோடு சொல்லினள்.

"இராமன்:—"என்ன! அதிக வார்த்தைகளுன்னை அறியாமல் பிதற்றுகிறாய். 'கிட்டவா நாயே என்றால் முகத்தை எட்டி நக்குவதுபோல' நான் சிறிது பேச இடங்கொடுத்ததனாலல்லவோ இவ்வளவு பேச ஆரம்பித்தாய்! நேரமாகிறது. வா, வந்து படகிலேறு. (அவள் கண்ணீர் விடுவதைப்பார்த்து) "நீலிக்குக்கண்ணீர் நிலையிலேயே" என்பதற்கு திருஷ்டாந்தம் உன்னிடமறிந்தேன். இப்பாசாங்குக்கு அஞ்சுகிறவன் நானல்ல" என்று சொல்லிக்கொண்டே பார்வதியை சண்பகாவதி நதிக்கரையி லழைத்துப்போய் அங்கிருந்த ஒரு படகிலேற்றி படகுக்காரர்களிடம்:—

"நீங்களிப்பெண்ணை அடுத்த கிராமத்தில் விட்டுவிடுங்கள். இதோ அதற்குக் கூலியாக ஐந்துரூபாய்" என்று சொல்லி அவர்களுக்கு ஐந்துரூபாய் கொடுத்துவிட்டு, ரூபா யகப்பட்ட சந்தோஷத்தால் தலை கால் தெரியாமல் காட்டை விட்டு வீட்டை நோக்கி ஓடலானான்.

இப்படகுக்காரர் தாங்களென்றும் மொத்தமாய்வாங்கி அறியாதஐந்துரூபாயை இன்று வாங்கினதினால் இச்செய்கைக் குடன் பட்டனர்.

புத்தகக் குறிப்பு:
சாதாரண வருஷத் தமிழ்ப் பாக்கெட் ரிப்பன் பஞ்சாங்கம் வெளிவந்துவிட்டது. இதில் வழக்கம்போல் பற்பலவிஷயங்களிருக்கின்றன. தினக்குறிப்பு எழுதிகொள்ள ஒவ்வொருதேதிக்கும் முழுபக்கம் விடப்பட்டுள்ளது. வேண்டுவோர் சென்னை ரிப்பன் புஸ்தகசாலைக்கு எழுதிக் கொள்ளலாம்.

சதாரம்.

சதாரம்:—(அதே கானகத்தில் மற்றொரு பாகத்தில்). அய்யய்யோ, என்ன செய்வேன்! தெய்வமே, என்மீது இரங்கக்கூடாதா? என் பர்த்தா எங்கிருக்கின்றனர் தெரியவில்லையே. ஸ்திரீகள் காட்டில் வரக்கூடாதென்று என் நாதன் சொன்னது சரியாய்ப்போய்விட்டது. ஏனெனில், இவ்விடம் வருகிறதற்குள் எவ்வளவோ துன்பத்தை யடைந்துவிட்டேன். துஷ்டமிருகங்கள் ஒரு பக்கம் செல்லுகின்றன. இந்த ஜெந்துக்களைப்பற்றிப் படித்தும் கேட்டுமிருக்கிறேன்; இப்பொழுதுதான் பிரத்தியட்சமாகக் கண்டேன். அவைகளைக் கண்ணுறும்பொழுது நடுநடுங்கிப் போய்விட்டேன். தவிர வெயிலினால் என் கால் பூராவும் வெந்துபோய் நடக்கச் சக்தியில்லாமல் ஆய்விட்டேன். ஆனால் இவ்வளவு கஷ்டங்களை யனுபவித்தும், என் பர்த்தாவை யிப்பொழுது தெரிசனம் செய்தால் நான் அனுபவிக்கிற கஷ்டங்களெல்லாம் வெயிலிற் பட்டபனிபோல மாயமாய்ப் பறந்துவிடுமென்று நினைத்து இவ்விடம் வந்தேன். என்னசெய்வேன், என் பர்த்தாவைக் காணவில்லையே. ஏ மரங்களே, கிளிகளே, குயில்களே, நீங்களறியாமல் அவர் ஒரு இடமும் தங்கியிரார்; சீக்கிரம் அவ்விடத்திற் சென்று, யான் தவித்துக்கொண்டிருக்கிறேன். சீக்கிரம் இவ்விடம் வந்து என் துன்பங்களுக்கு ஒரு விமோசனம் தரும்படியாக, என் நாதனிடத்தில் சொல்லுங்கள்; இல்லாமற்போனால் அவரிருக்குமிடத்திற்கு என்னை யழைத்துக்கொண்டு போங்கள். வனதேவதைகாள்! நீங்களாவது என் பேரில் கிருபைசெய்து என் நாதனை யிங்குகொண்டு விடவோ, அல்லது என்னை யவ்விடத்திற்கு அழைத்துக்கொண்டுபோகவோ செய்யுங்கள். பதிலில்லையே, ஒருவருக்கும் என்மீது இரக்கமில்லாமற்போய் விட்டதே. யான் என்செய்வேன், தெரியவில்லையே. அவரைத்தேடி எவ்வளவு தூரம் நடந்துபோகிறது. தெய்வமே, கால்சுடுகிறதே, நடக்க முடியவில்லையே.

> "படிகட வடிக்கண நல்பாரினெழுகாய் நுண்
> பொடிசுட வுடற்கணழல் பொங்கு வெயின்மீது
> முடிசுட மிகத்துடி துடித்து முதிர்தீப்பும்
> கொடிசுட ரெழுந்துபடு கொள்கை" யானுனேன்.

என்னசெய்வேன், என்நாதன் இப்பொழுது அருகிலிருந்தால் இத்துன்பங்களை நினைத்து வருந்த இடை வந்திராது. என் நாதா, தங்களை நாதனென்று யான் எவ்விதம் கூறுவேன். தங்களுடைய வஞ்சகத்தை யிப்பொழுதல்லவோ அறிந்துகொண்டேன். தாங்கள் கோட்டை வாசலுக்கு வெளியில் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பதாயும், என்னைப்பெற்றோரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சீக்கிரம் அவ்விடம் வந்து சேரும்படியாக உரைத்த தாங்கள் அவ்விடத்தில் நிற்காமல் என்னை யேமாற்றிவிட்டு எவ்விடம் சென்றீரோ. நான் தங்களை எவ்வளவு தரம் அழைத்தும் ஏனென்று கேட்க மனமிரங்கவில்லையா. நல்லது, இதின் காரணத்தை யறிந்துகொண்டேன். என்னை விவாகஞ் செய்தவுடன் அவருடைய இராஜ்ஜியத்தையும், தகப்பனையுமிழந்து கானகம் போகவேண்டி வந்ததே; என்னையும் அழைத்துக்கொண்டு கானகம் சென்றால் எப்படிப்பட்ட துன்பங்களை யெல்லாம் அனுபவிக்கவேண்டி

வருமோ; ஆகையால் என்னை யழைத்துக்கொண்டு போகக்கூடாதென்று நிச்சயித்து என்னை யேமாற்றி இவ்விடம் வந்திருக்கலாம். அவர் அவ்வித அபிப்பிராயத்தைக் கொள்வது தப்பல்ல. ஏனெனின் அவர் என் கையைத் தொட்டதினாலல்லவோ இக்கதியை யடைந்தார். கஷ்டம், நான் ஒரு பைத்தியக்காரியாயிருக்கிறதினாலல்லவோ இவ்விதமான அபிப்பிராயத்தைக்கொண்டேன். ஒரு அரசனுக்குப் புத்திரனாகஜனித்த மகாபுருஷன் இப்படிப்பட்ட அபிப்பிராயத்தைக் கொள்வாரா ? மாட்டார்; இது நிச்சயம்.

ஆனால் வேறேஎன்னகாரணமாயிருக்கலாம். அவர்கானகம்போய், பிழைக்கும் வழியைத்தேடி, சீக்கிரம் என்னை யழைத்துக்கொண்டு போவேனென்றும், அதுவரையில் யான் என்பெற்றோரிடத்தில் இருக்கவேணும், காட்டில் வரக்கூடாதென்றும் அவர் உரைக்க, அதற்குடன்படாது யான் அவர் கூடத்தான் வருவேனென்று பிடிவாதமாய்நின்றேன்; அதற்காக என்னை ஏமாற்றவேணுமென்று உத்தேசித்து வெளியில் நிற்கிறேனென்று என்னிடத்தில் சொல்லிவிட்டு எங்கேயாவது சென்றிருக்கலாம். யான் அவ்விடம்வந்து பார்க்க அவரைக்காணாமல் என் பெற்றோரிடத்திற்குத் திரும்பிப்போய் சௌக்கியமா யிருக்கலாமென்ற உத்தேசத்தைக் கொண்டிருக்கலாம். இவ்விதமான உத்தேசம் அவருக்குத்தான் சரியாயிருக்குமே தவிர வேறே ஒருவருக்கும் சரியாகத்தோன்றாது. ஒரு வேளை அதின் காரணம் பின் வருமாறு இருக்கலாமோ. அதாவது, என்னைப் பெற்றோரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சீக்கிரம் வரவேணுமென் றுரைத்திருக்க, அவர் உரைத்தபடி திரும்பி வருகிறதற்கு நேரமாயிருக்கலாம்; அதினால், யான் அவர் கூடக் கானகம் போகிறதற் கிஷ்டமில்லை, பெற்றோர்களிடத்தில் தானிருக்க எண்ணங்கொண்டிருப்பதாய் நினைத்து எங்கேயாவது போயிருக்கலாம். மேற்கூறிய காரணங்களில் எதாயிருக்கலாமென்று தெரியவில்லையே. என் மாதாவிடத்தில் விடைபெற்றுக்கொண்டு க்ஷணநேரத்திற்குள் வந்துவிட்டேனே. ஆகையால் கடைசியாகச் சொன்ன காரணமாயிராது. இதையெல்லாம் உத்தேசிக்கிறபொழுதும் என் பிராண நாதரது பெருந்தன்மையை நினைக்கிறபொழுதும், யான் கானகம் ஏகத்தகுந்தவளல்லள் என்றதைக் கைக்கொண்டு மேற்கூறிய இரண்டாவது உபாயத்தை யெடுத்தனரென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். என்ன இருந்தால் தானென்ன. ஸ்திரீகள் தங்கள் பர்த்தாக்கள் கூடத்தானிருக்கவேணுமென்று சாஸ்திரங்கள் முறையிடுவதால், அவர் எங்கு சென்றிருந்தாலும், அவரை யிக்கானகத்திலோ, அல்லது வேறே யெவ்விடத்திலாவது தேடி, அவரைக்கண்டு பிடித்து, அவருடன் காலத்தை சுகமாயோ அல்லது துக்கமாயோ கழிக்கவேண்டியது எனது கடமையாயிருக்கிறது. அவரைக் காணாது இனிமேல் என் ஊரில் காலை வைக்கப்போகிறதில்லை. அய்யோ, எல்வளவு தூரம் நடந்தாய் விட்டது; எனது அருமை நாயகனைக்காணவில்லையே. என் கழுத்தில் மாலை போட்டதுதான் தெரியும்; என்னை விட்டுப்பிரிந்து போகிற சமயத்தில் பேசின விசனமான பேச்சுகளைத்தவிர, சந்தோஷமான வார்த்தைகள் ஒன்றும் பேசி யறியேனே. என் நாக்கு வரண்டு போகிறதே, கால்சுடுகிறதே. என்னால் இனி நடக்கமுடியாது. நடக்காமற்போனால் எவ்விதம் என் பிராணநாதரைக் காண்கிறது. இன்னும் கொஞ்சம் தூரம் போய்ப் பார்ப்போம் (ஒரு முள்காலில் தைக்கிறது) அய்யய்யோ, என்ன செய்வேன். என் காலில் முள்தைத்து விட்டதே (கீழே விழுகிறாள்) கால் வலிக்கிறதே. இந்த முள்ளை எவ்விதம் எடுக்கிறது (முள்ளை யெடுக்க அதைத்

தொடுகிறாள்) கைகூசுகிறதே, அய்யய்யோ! என் நாதா (முள்ளைப் பிடுங்கி எறிகிறாள்) என் பிராணநாதா, எங்கு சென்றீர். காது கேட்கவில்லையா? கதறுகிறேனே. (முள்ளெடுத்த இடத்திலிருந்து வருகிற இரத்தத்தைத் துடைக்கிறாள்). என் உடம்பினினின்றும் இதுவரையில் ஒரு துளி இரத்தமாவது வந்ததைக்கண்டறியேன். என் நாதா, தங்களைக் கண்டுபிடிக்க இன்னும் எவ்வளவு தூரம் நடக்கவேணுமோ தெரியவில்லை.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்."

என்றதுபோல், யான் ஒரு வருத்தத்தையும் மனதில் நினைக்கவே கூடாது. உங்களை யெப்படியாவது கண்டுபிடிக்கலாமென்ற நிச்சயமுண்டானால், எவ்வளவு தூரம் வேணுமானாலும் நடக்கத்தயாராயிருக்கிறேன். என் பிராணநாதா, தாங்கள் எவ்விடத்தில் ஒளிந்துகொண்டிருக்கிறீர். எதைப் பார்த்தாலும் தங்களுடைய திருமுகத்தைக் கண்டாற்போலிருக்கிறது. யான் இதோ இருக்கிறேனே; நீயேன் வருந்துகிறாய், என்று ஒரு அமிர்தமான வார்த்தையாவது என்னிடத்தில் சொல்லக்கூடாதா. அய்யோ, அதோ ஒரு சிம்மம் ஓடுகிறதே, இதோ ஒரு கரடி போகிறது; பயமாயிருக்கிறதே. மரத்தையும், சிம்மம், கரடி முதலான துஷ்டமிருகங்களைத் தவிர, என் நாதனைக் காணவில்லையே. என்ன செய்வேன். இன்னும் சிறிது தூரம்போய்த்தேடிப் பார்க்கிறேன். தெய்வமே, யான் பதிவிரதா தர்மத்தைக் காப்பாற்றிக் கொண்டு வருவது சத்தியமானால், என் பர்த்தா சீக்கிரம் என் கண்களுக்குத் தென்படட்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற ஆன்றோர் சொற்படி, என்னால் கூடினமட்டும் அவரைத்தேடிப்பார்க்கிறேன். அய்யோ வெயில் கொடூரமாயிருக்கிறதே (புஷ்பாங்கதன் தங்கியிருக்கப்பட்ட மரத்தை நெருங்கிப்போகிறாள்). அதோ ஒரு மரம் காண்கிறது; அதின் நிழலில் சிறிதுநேரம் இளைப்பாறுகிறேன். என் பிராணநாதா, என்னை யேமாற்றி விட்டீரே, எங்கு சென்றீரோ, என்னால் நடக்க முடியவில்லையே, என் கால்கள் தளருகின்றன. இனி யென்னால் ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது; என் நாதா, யான் அநாதியாய் விட்டேனே, தெய்வமே, தெய்வமே, தெய்-வ-மே, (என்று சோர்ந்து மரத்தினிழலில் மூர்ச்சையற்றுவிழுகிறாள்).

புஷ்பாங்கதன்:—(சதாரத்தின் சப்தத்தைக் கேட்டவுடன் மயக்கத்தினின்றும் எழுந்து) என்ன, இக்கானகத்தில் ஒரு பெண்மணியின் அழுகுரல் அல்லவோ கேட்கின்றது. இவள் இங்கே வரவேண்டிய காரணமென்ன யான் அநாதியாய் விட்டேனே, தெய்வமே, தெய்வமே, என்றல்லவோ உரைத்தனள். அவளுக்கு சகாயத்தை வேண்டி இவ்விதம் உரைத்தனளென்று தோன்றுகிறது. யான் அந்த சகாயத்தைக் கொடுக்கப்பார்க்கிறேன். அவளுடைய சப்தம் நன்றாய்க் காதில் கேட்டது; ஆகையால் அவள் சமீபத்திலதானிருக்கவேணும், அவளைக் கண்டுபிடித்து, அவளுக்கு வேண்டியவையென்னவென்று கேட்டு, அவற்றைச் செய்கிறேன். (அவளைத்தேடிப்போகிறான்) இதோ படுத்துக்கொண்டிருக்கின்றனள். ஏ, பெண்ணே, நீ யார், நீயிங்கே வரவேண்டிய காரணமென்ன, ஏன் பரிதாபப்பட்டுக் கொண்டிருக்

தாய். (கிட்டப்போய்ப் பார்க்கிறான்) ஆ! நம்முடைய சதாரமல்லவா! ஏ, சதாரம், என் கண்மணி, நீயா இவ்விதம் பரிதாபமான வார்த்தைகளைச் சொன்னாய். என்னைத் தேடித்தான் இவ்வளவு தூரம் வந்தனையோ, அல்லது உன்னுயிரை விட்டுவிட வேணுமென்று வந்தனையோ. என்னமாயிருந்தாலும் யான் சற்று முன் உன்னை நினைந்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தேன்; இப்பொழுது உன்னைக் கண்டவுடன் மனதில் திருப்தியடைந்தேன். (சதாரத்தையெழுப்ப, அவள் எழுந்திருக்கவில்லை. அவன் புத்தி மயங்கி, கண்ணீர் விட்டு அவள்மேல் புரண்டு அழுது, பின் அவளை மயக்கத்தினின்றும் தெளிவித்து எழுப்பி) ஏ சதாரம், என் பிராணநாயகி, நீ யெப்பொழுது, எதற்காக இங்கு வந்தாய்; உன் கால்கள் நோகவில்லையா; இவ்வளவு தூரம் எவ்விதம் நடந்து வந்தாய்?

சதாரம்:—என் பிராணநாதா, தாங்கள் இவ்விதம் என்னிடத்தில் இரக்கமில்லாமற் போவீர்களென்று யான் கனவிலும் நினைக்கவேயில்லை. என்னை ஏமாற்றிவிட்டுவர எவ்விதம் தங்களுக்கு மனம் துணிந்தது? யான் எவ்விதம் இவ்வளவு தூரம் வந்தேனென்று கேட்கிறீர்களே. எனது பதிவிரதா தர்மமானது, தங்களை யெப்படியாவது கண்டு பிடித்து தங்களுடன் காலங்கழிக்க வேணுமென்று என்னைப் பலவந்தமாய் முன்னே பிடித்துத்தள்ள, யான் அந்தப் பதிவிரதா தர்மத்தின் சக்தியால் இங்குவந்து, தங்களைக் காணும்படியாகநேரிட்டது. என் பிராணேசா, தாங்கள் நம்முடைய ஊர்கோட்டை வாசலுக்கு வெளியில் எனக்காகக் காத்திருப்பீர்களென்றும், என்னைச் சீக்கிரம் என் மாதாவிடத்தில் விடைபெற்று வரவேணுமென்றும் உரைத்து, என்னை ஏமாற்றி வந்துவிட்டீர்களே. அதின் காரணம் யாதோ அறியேன். ஆ, ஆ, காரணம் நன்றாய் அறிந்துகொண்டேன். இப்பொழுது வைசியகுலத்தில் பிறந்த என்னை விவாகஞ்செய்து கொண்டீர்கள்; சரிக்குச் சரியாகவுள்ள சம்பந்தமுமில்லை, தவிர, என்னைத்தொட்டவுடன் இவ்விராஜ்ஜியத்தையுமிழந்து கானகம் செல்லவும் நேரிட்டது. ஆகையால் இம்மகா பாவியினுடைய முகாலோபனமே உதவாது; அவ்விதம் வைத்துக்கொண்டால், அநேக துன்பங்கள் உண்டாகுமென்று நினைத்து என்னை நிந்தித்து வந்தீர்கள்போல் தோன்றுகிறது. பிராணநாதா, தங்களுடைய அபிப்பிராயமெல்லாம் வாஸ்தவந்தான்; இந்த மகாபாவியைத் தொட்டதினாலல்லவோ தாங்கள் இக்கதியையடைந்தீர்கள்.

புஷ்பாங்கதன்:—சதாரம், என் கண்மணி, அவ்விதமல்ல; இந்த எண்ணத்தை யான் மனதில் கொள்ளவேயில்லை. இப்படிப்பட்ட எண்ண மிருக்குமாயின், க்ஷத்திரியகுல இராஜ கன்னிகைளையெல்லாம் வெறுத்து, இராஜ்ஜியம் போனாலும் போகட்டுமென்று சொல்லி உன்னை விவாகஞ்செய்துகொள்வேனோ? என் கண்ணே, நீ என்னைப்பற்றி நினைத்துக் கொண்டிருப்பது மகாதபபிதமான அபிப்பிராயம். உன்னைக் கனவில் கண்டவுடன்தானே பரவசமாய் விட்டேன். நேரில் கண்டபொழுதோ, நான் அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. அதினாலல்லவோ, உன்னை யெவ்விதத்தாலும் விவாகஞ் செய்துகொள்ள வேணுமென்று பிடிவாதமாய் நின்றேன்.

சதாரம்:—என் பிராணநாதா, என்னை விவாகஞ் செய்து கொண்டதின் நிமித்தமாக தங்களுடைய பிதாவையும், இராஜ்ஜியத்தையு மிழந்து, இக்கா

னகம் வரும்படியாக நேரிட்டதே. இம் மகாபாவியைத் தொட்டவுடன் இவ்விதம் நேரிட்டால், இனித் தங்களுக்கு என்னதுன்பங்களெல்லாம் வருமோ தெரியவில்லை, அதைப் பற்றித்தான் யான் அதிக வருத்தப் படுகிறேன்.

புஷ்பாங்கதன்:—என் பிரியசகி, ஏன் இதை நினைத்துத் துன்பப்படுகிறாய். நாம் பிறக்கும்பொழுதே நம்முடைய தலையில் பிரம்மாவால் எழுதப் பட்டவைகளை யல்லவோ நாம் இப்பொழுது அனுபவிக்கிறோம். தவிர, நாம் முன்ஜென்மத்தில் செய்த கர்மங்களின் பலனையல்லவோ இப்பொழுது அனுபவிக்கிறோம். இதற்காக யாரைக் குற்றஞ் சொல்லுகிறது. விதியைவெல்ல யாரால்முடியும், சதாரம் இதிருக்கட்டும், யான் ஒரு காரியம் சொல்லுகிறேன், கேள் யான் உன்னைத்தொட்டு விவாகஞ் செய்து கொள்ளாம லிருந்தால், நீ உன்னுடைய குலத்தில ஒரு புமானை மணந்து, அவருடன் சௌக்கியமாய் வீட்டிலிருக்கலாமே; இந்தக் கானகம்வந்து வருத்தப்படவும் வேண்டாம்; என்னாலல்லவோ நீ யிக்கதியை யடைந்து வருத்தப்படுகிறாய்; என் பிரியசகி, இதற்காக, நீ யென்னை க்ஷமித்துக் கொள்ளவேணும்.

சதாரம்:—என்னைப் பரிகாசம் பண்ணுகிறீர்களா! நானு, உங்களை க்ஷமிக்கவேணும். நல்லது, நான் தங்களை க்ஷமிக்கவேமாட்டேன்; எனக்கு இஷ்டமில்லை. ஏனெனின், நான் தங்களை க்ஷமிக்கும்படியாக, தாங்கள் நல்ல குற்றஞ் செய்யவில்லை. நாதா, நான் ஒரு வார்த்தை சொல்லுகிறேன், கேளுங்கள்.

புஷ்பாங்கதன்:—சற்றுப்பொறு; நான் ஒருவார்த்தை சொல்லுகிறேன், அதை முதலாவதுகேள். நீயேன் இக்கானகம் வந்துசேர்ந்தாய்? நீ உன் பெற்றோருடனும் தம்பியுடனும் அரண்மனையில் பெருமையுடனிருக்கிறதை விட்டுவிட்டு, இங்கு ஏன் வருத்தமடைய வந்தாய்?

சதாரம்:—என் பிராணநாதா, என்ன சொல்லுகிறீர்கள். தாங்கள் சொல்லுகிறபடி நான் அரண்மனையில் என் பெற்றோர்களுடனிருந்தால் எனக்கென்ன பெருமையுண்டு. "முத்தும், பொன்னும, பவழமும், பெண்ணும், தாம் பிறந்தவிடத்தில் பெருமை பெறுவதில்லை, புகுந்த விடத்திலே சிறப்படைவ தியற்கை". தவிர, பொன்னும், பவழமும், முத்தும், பெரிய தனவான்களிடத்தில் சேர்ந்து அவர்கள் பெட்டிகளிலிருந்தால் பெருமை யடையாது; அவற்றை அவர்கள் உபயோகித்தால் மாத்திரம் பெருமையை யடைகின்றன. அதே மாதிரியாக, ஸ்திரீகள் எவ்வளவு பெருமையுடைய குலத்தில் பிறந்தாலும், அவர்கள் பிறந்த இடத்தில் பெருமையை அடைகிறதில்லை; ஆனால் அவர்கள் புகுந்த விடத்தில்தான் பெருமை யடைவார்கள்; அதாவது அவர்களது பர்த்தாக்கள்கூட இருந்தால் மாத்திரம் பெருமை யடைவார்கள். இது எப்படிப்பட்ட பெரிய இடங்களில் பிறந்த பெண்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது; அப்படியிருக்க, அதிக ஏழை வயசத்தில் பிறந்தவளாகிய யான் ராஜ புத்திரராகிய தங்களை மணந்தும், தங்களகூட இருக்காமல் பிரிந்திருந்தால் எனக்கு என்ன பெருமையுண்டு. தவிர, பெட்டிகளில் வைத்திருக்கப்பட்ட இரத்தினங்களைப்போல, நானும் எனது பெற்றோர்கள் கூட சும்மாயிருந்தால் என்ன பிரயோசனம். அவைகளை உபயோகித்தால் மாத்திரம் அவை பெருமை யடைவதுபோல, நான் தங்கள்கூடவே யிருந்து கொண்டு தங்களுக்கு சிஷ்ருஷை செய்தால் மாத்திரமே நான் ஜெனித்ததற்

குப் பிரயோசனமுண்டு. இக் காரணங்களால்தான் நான் தங்களைத் தேடி இங்குவந்தேன். என்பிராணநாதா. இது இங்குநிற்கட்டும்; இனிமேல் நடக்க வேண்டியதைப்பற்றிச் சற்று ஆலோசித்துப் பார்ப்போம். அந்த மகாபாவி என் தம்பியாலல்லவோ நாம் இக் கதியையடைந்து இவ்விதம் சங்கடப்படும்படியாக நேரிட்டது. இந்தக் காட்டுவழியாகப் போகிறோமே, நாம் இன்று எங்கேதங்குகிறது; சமீபத்தில் ஏதாவது ஊரிருக்கிறதா, தங்களுக்குத் தெரியுமா? அவ்விடத்தில்போனால் நாம் எவ்விதம் காலங்கழிக்கிறது; இதைப்பற்றிச் சற்று ஆலோசித்துப் பார்த்து நடக்க வேண்டியதைச் சொல்லுங்கள். நாதா, அதோ பாருங்கள், ஒரு சிம்மம் ஓடுகிறது, பயங்கரமா யிருக்கிறதே, ஐயோ! யான் என்ன செய்வேன்?

புஷ்பாங்கதன்:—என் பிரியஸகி, நீ ஏன் பயப்படுகிறாய்? நான் உன்னருகி லிருக்கும்போது நீ எதற்காக பயப்படவேணும்; போகலாம், வா. சமீபத்தில் ஏதாவது ஊர் இருக்கிறதாவென்று பார்ப்போம். அய்யோ, கால் சுடுகிறதே. சதாரம், என்னைச் சற்றுத் தாங்கிக்கொள். நாக்குவரண்டுபோகிறதே, பசியெடுக்கிறதே, உடம்பெல்லாம் க்ஷீணித்துவிட்டதே; அய்யோ ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லையே. சற்றுமுன் உனக்கு தைரியத்தைச் சொல்லிக் கொண்டிருந்த யான் க்ஷணநேரத்தில் இவ்விதமாய் விட்டேனே. ஏ, சதாரம், என்னால் பொறுக்க முடியவில்லை, நடக்கச் சக்தியில்லை, நிற்கவும், கைகால்கள் தளருகின்றன, என்னசெய்வேன் (கீழே விழுகிறான்) அய்யோ, என்னசெய்வேன், சதாரம் நாக்குவரண்டுபோகிறதே, கொஞ்சம் ஜலம்வேணுமே, பேசுகிறதற்குக்கூட நாக்கு எழும்பவில்லையே.

சதாரம்:—(புஷ்பாங்கதனை மடியின்மீது வைத்துக்கொண்டு) என்பிராணநாதா, என்னசெய்கிறது தங்களுக்கு, நான் இக்கோலத்தைக் காணவா இங்குவந்தேன். இம்மகா பாவியாலல்லவோ தாங்கள் இவ்விதம் பரிதவிக்க வேண்டிவந்தது. பிராணநாதா, பிராணேசா, ஏ, பிரபோ, பதிலில்லையா? அய்யோ, யான் என்னசெய்வேன். சுவாசமும் குறைந்துகொண்டு வருகிறதே. தெய்வமே, என்னை இவ்விதமாய்ப் பரீக்ஷைசெய்யவேணுமா? நானோ ஒரு அநாதி, தாய் தகப்பன், சுற்றத்தார்களை விட்டு, பர்த்தாவை தெய்வமாக எண்ணி, இங்குவந்தும், நான் இக் கோலத்தைக்காண நேரிட்டதே. என் பிராணநாதா, பதிலில்லையா, க்ஷீணத்தினா லிருக்கலாமோ. நாதா, சுவாசமேயில்லையே, தாங்கள் பரலோகஞ் சென்று விட்டீரோ. எனக்கு ஆறுதல் சொல்பவர் ஒருவரையும் காணவில்லையே. நாதா, என்னை விட்டுவிட்டுப் போகமனம் எவ்விதம் துணிந்தது. என்னிடத்தில் ஒரு வார்த்தையாவது பேசக்கூடாதா. பிராணநாதா, பிராணநாதா, பிராணேசா, அய்யோ, என்ன செய்வேன். தங்களைச் சாணவேணுமென்று இவ்வளவு தூரம் இக்கானகத்தில் வந்தது வீணாய்ப் போய்விட்டதே. இம்மகா பாவிகையைத் தொட்டவுடன் கானகம் வரநேரிட்டது. இப்பொழுது என்னைக் கண்டவுடன் தங்கள் உயிரும் தங்களை விட்டகன்றது. நான் ஒரு கொடிய பாதகிதான். நான் இங்கு வந்ததினாலல்லவோ இவ்விதம் நேர்ந்தது. எனது வஸ்திரத்தை கொண்டு மெதுவாக அவர்மீது வீசுகிறேன் (வீசுகிறாள்). பிராணநாதா சுவாசம் வரவில்லையே. என்னைப் பரீக்ஷை செய்யவேண்டாம். நீ வருத்தப்படாதேயென்று ஒரு வார்த்தையாவது என்னிடத்தில் சொல்லக்கூடாதா. நான் தங்களுடைய தருமபத்தினி யல்லவா, காரியம் மிஞ்சிவிட்டது, இனி

யென்னசெய்வேன் தெய்வமே அநாதியாய்விட்டேனே. ஏ கிருஷ்ணா! வாசு தேவா! ஹிருதய கமலாவாஸி! துரௌபதியை ஆபத்துக் காலங்களில் எவ்விதம் ரக்ஷித்தீரோ அதே மாதிரியாக பரிதவித்துக்கொண் டிருக்கபபட்ட என்னையும் ரக்ஷித்து மாங்கலிய பிக்ஷைதரவேணும். இன்னும் ஒருதரம் விசிறிப்பார்ப்போம். தன்வஸ்திரத்தைககொண்டு மெதுவாகவீசுகிறாள்).பிராண நாதா! தங்களுக்கு என்னசெய்கிறது என்னவேணும் வாய்திறந்து ஒரு வார்த்தையாவது பேசுங்கள்.

புஷ்பாங்கதன்:—சதாரம் விசிறியதால் சற்று மூர்ச்சை தெளிந்து சொல்லுகிறான்.

சதாரம்:—நாதா! தங்களுக்கு நாக்கு வரண்டுபோகிறதா? அதை எனக்குத் தெரிவிக்கக்கூட சக்தியில்லையே. என்பிராணேசா! க்ஷணநேரத்தில் நான் ஜலம் கொண்டுவருகிறேன். இன்னும் ஒருதரம் பேசுங்கள் பார்ப்போம். தங்களையேன் இங்சமயத்தில் வருத்தப்படுத்துகிறேன். இந்த இடத்தில் சாவதானமாய்ப் படுத்துக்கொண்டிருங்கள். இதோ நொடிப்பொழுதில் ஜலம் கொண்டுவந்து தங்களுடைய ஆயாசத்தைத் தீர்க்கிறேன். தெய்வமே! நான் சிறிது தூரம்போய் தண்ணீரைத் தேடிக் கொண்டுவருகிற வரையில்,என்நாதனை,இம்மகானுபாவனை,காட்டுமிருகங்களினின்றும், துஷ்டஜெந்துக்களினின்றும்காப்பாற்றவேணும்.ஏ பறவைகளே! என்நாதனைக் காப்பாற்றுங்கள். நாதா! நான் சென்று சீக்கிரம் தண்ணீர் கொண்டுவந்து தங்களுடைய தாகத்தைத் தீர்க்கிறேன். போய்வாவென்று சொல்லுகிறதற்குக்கூட நாக்கெழும்பவில்லையே? அய்யோ, கண்கள் சுழலுகின்றனவே. நாக்கை நீட்டுகிறார். க்ஷணம் ஜலம் கொண்டுவருகிறேன் (போகிறாள்). நான் அரை நாழிகை தூரம் வந்தும் ஜலம் ஒரு இடத்திலாவது காணப்படவில்லையே. இன்னும் சற்றுதூரம் போய்ப் பார்ப்போம் அதோ, சக்கரவாளபக்ஷியின் சப்தம் கேட்கின்றது. அவைகள் ஜலமிருக்கப்பட்ட இடத்தில்தான் வாசஞ்செய்யும் என்று கேட்டிருப்பதால் அவ்விடத்தில் நிச்சயமாய் ஜலத்தைக் காணலாம். சற்றுவிரைவாகச் செல்லுகிறேன் (ஒருதடாகம் தென்பட்டது). நான் கூடியமட்டிலும் நல்ல அதிர்ஷ்டசாலிதான். இத்தடாகத்தினின்றும் கொஞ்சம் ஜலம் கொண்டுபோய் என் நாதனது தாகத்தைச் சாந்திசெய்கின்றேன். அய்யோ, தண்ணீரை எதில் கொண்டுபோகிறது; ஒரு இலையில் கொண்டுபோவோமென்றால், பெரிய இலைகளுள்ள மரம் ஒன்றாவது காணவில்லையே; பதார்த்தமோ நம்மிடத்திலில்லை; என்ன ஆலோசனை செய்கிறது, ஒருகாரியம் செய்கிறேன். எனது வஸ்திரத்தின் ஒரு பாகத்தை நனைத்துக் கொண்டுபோய் அந்தஜலத்தை என்னருமை நாயகனது வாயில் பிழிகிறேன்.

வஸ்துவின் பொருட்தொகையும், கனமும்.

(Mass) வஸ்துவின் பொருட்தொகுதி வேறு என்றும், கனம் வேறு என்றும் உங்களுக்கு தெளிவாய்த் தெரியச் சொல்வதற்கு இன்னுமொரு

பரிசோதனையால் காட்டுகிறேன். முன் பாடங்களில் உபயோகப்படுத்திய ரப்பர் கயிற்றை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் ஒரு நுனியில் ஒரு சிறு இரும்பு குண்டைக் கட்டித் தொங்க விடுங்கள். இரப்பர் கயிறு நீளமாகிறது; ஒரு ரூபாயைக் கட்டித் தொங்கவிட்ட பொழுது இரப்பர் எவ்வளவு தூரம் நீண்டதோ அதே அளவு இரும்பு குண்டு கட்டினபோதும் நீளமானால் இரும்பு குண்டின் மாஸூம், ரூபாயின் மாஸூம் ஒரே அளவை உடையன வென்று விளங்குகின்றதல்லவா? ஏனெனில், இரும்பு குண்டை பூமி தன் ஆகர்ஷண சக்தியால் எவ்வளவு பலமாய் இழுக்கின்றதோ அவ்வளவு பலமாய் ரூபாயையும் இழுக்கின்றதென்பது நம் பரிக்ஷையால் தெளிவாகின்றது; அதாவது ரூபாயின் கனமும் இரும்பு குண்டின் கனமும் ஒரே அளவினம். ஆகையால் ரூபாயின் பொருட்தொகுதியும் (Mass) இரும்பு குண்டின் மாஸூம் ஒரே அளவாய்த் தான் இருக்கவேண்டும்.

இரும்பு குண்டு இரப்பர் கயிற்றில் தொங்கிக்கொண்டிருக்கும் போது குண்டின் கீழ் ஒரு காந்தத்தைப் பிடித்தால், பூமி குண்டை இழுப்பதோடு காந்தமும் அதேமுகமாய் இழுப்பதால் இரப்பர் கயிறு முன்னிலும் அதிகமாக நீளும். இப்பொழுது இரும்பு குண்டு முன்னிலும் அதிகமாய் கனமுடையது போல் தோன்றும். அவ்வாறு தோன்றுகிறதே ஒழியே உண்மையாகவே முன்னிலும் அதிகமாய் அது கனமுடையதாயிற்றா? காந்தத்தை அடியில் பிடிப்பதற்கு முன் எவ்வளவு கனமுளளதாய் இருந்ததோ அவ்வளவே தான் இப்பொழுதும் கனமுள்ளதாய் இருப்பினும், இப்பொழுது, பூமியின் ஆகர்ஷண சக்தி, காந்தத்தின் ஆகர்ஷண சக்தி, ஆகிய இரண்டு சக்திகள் ஒரே முகமாய் இழுப்பதால், குண்டு முன்னிலும் அதிகமாய் இரப்பரை இழுத்துக்கொண்டு கீழ்நோக்கி வந்துவிட்டது. இரும்பு குண்டின் பொருட்தொகுதியில் ஏதாவது வித்தியாசம் உண்டாவென்று பாருங்கள். காந்தத்தை குண்டினடியில் பிடித்தாலும் ஒன்றுதான், பிடியாமல் விட்டாலும் ஒன்றுதான். இரும்பின் மாஸ் சிறிதும் வேறுபடாமல் ஒரே மாதிரியாய்த்தான் இருக்கின்றது.

ஒரு வஸ்துவில் உள்ள மாஸ் (பொருட்தொகுதி) எங்கும் ஒரே அளவினதாய்த்தான் இருக்கும். பளுவோ, பூமியின் ஆகர்ஷண சக்தியின் காரியமாகையால், சில இடங்களில் வித்தியாசப் பட்டாலும்படும். ஒவ்வொரு வஸ்துவும் பூமத்தியரேகை (Equator) க்குப் பக்கத்தில உள்ள நமது தேசங்களில் இருப்பதைவிட துருவ தேசங்களுக்கு (Poler Regions)ப் பக்கத்தில் பளுவு கொஞ்சம் அதிகமாய் இருக்கும். அதுவே போல் ஒரு வஸ்துவை புகைக்கூண்டில் (Balloon) பூமிக்குமேலே கொண்டுபோனல் அதன் பளுவு குறைவாய்த் தோன்றும். சமுத்திரமட்டத்தி லிருந்து சுமார் 4000 மைல் உயரம் ஒருவன்போகக் கூடுமானல் அவ்விடத்தில் வஸ்துக்கள் இவ்விடம் இருப்பதில் கால்பங்குதான் கனமுள்ளவையாய்த் தோன்றும்; அதாவது இவ்விடம் 1-மணங்கு கனமுள்ள வஸ்து 4000 மைல் உயரத்தில் $\frac{1}{4}$-மணங்குதான் இருக்கும். ஆனல் உயரத்தில் கொண்டுபோனதினலேயே அதன் பொருள் குறைந்து போகிறதா? சிறிதுமில்லே. பூமியின் ஆகர்ஷண சக்தி அவ்விடத்தில் குறைந்துபோகிறபடியால் வஸ்துவின் கனம் குறைவாய்த் தோற்றுகிறது. துருவதேசங்களுக்குப் பக்கத்தில் பூமியின் ஆகர்ஷண சக்தி அதிகமாகையினல் வஸ்து அதிக கனமுள்ளதாய்த் தோற்றுகின்றது. ஏன்

பூமியின் மட்டத்தினின்றும் மேலே போகப்போக பூமியின் ஆகர்ஷண சக்தி குறைகின்ற தென்பதும், துருவதேசங்களில் இச்சக்தி அதிகமாய் இருக்கின்றதென்பதும் பின் ஒருபாடத்தில் தெரிவிக்கிறேன். இப்பொழுது அதற்குக் காரணங்களை விவரிக்காமல் விடுகிறேன்.

இரண்டு வஸ்துக்கள் ஒரே இடத்தில் ஒரே அளவு பளுவுள்ளவை களாய் இருந்தால் அவை இரண்டின் பொருட்தொகுதியும் (Mass) ஒரே அளவாய்த்தான் இருக்கவேண்டும்.

வஸ்துக்களின் பொருட்தொகுதியை,அதாவது மாஸை (Mass)அளக்க நேரான வழியொன்றுமில்லை. ஒரு வஸ்துவின் மாஸ் எவ்வளவென்று தெரிந்துகொள்வதற்கு அதன் பளுவைக்கொண்டு தான் அறியவேண்டியிருக்கிறது. மணங்கென்றும் வீசையென்றும், பலமென்றும் நாம் சொல்வதெல்லாம் நம்முன் பலருமொப்ப நியமித்துக்கொண்ட ஒரு அளவுதான். ஒரு அளவு இரும்பையோ பித்தளையையோ ஒருமணங்கு என்கின்றோம். அதை பூமி எவ்வளவு பலத்துடன் இழுக்கிறதோ அதே அளவு பலத்துடன் இன்னுமொரு வஸ்துவை இழுத்தால் இவ்விரண்டின் பளுவும் ஒன்றேதான் என்றும், அதே காரணத்தால் இரண்டின் பொருட்தொகுதியும் ஒரே அளவினம் என்றும் நிர்ணயம் செய்கிறோம். இப்படியே $\frac{1}{2}$-மணங்கு $\frac{1}{4}$-மணங்கு முதலான பல அளவுகள் ஏற்படுத்திக் கொள்கிறோம்.

நமக்கு சர்க்கரையோ அல்லது வேறு எந்தவஸ்துவோ வேண்டுமானால் நாம் வஸ்துவின் பொருட்தொகைக்குப் (Mass) பணம் கொடுக்கிறோமே ஒழிய, அதன் பளுவுக்குப் பணம் கொடுப்பதில்லை. நமக்கு ஒரு வீசை சர்க்கரை வேண்டுமானால் நாம் ஒரு வீசையென்று வைத்துக்கொண்டிருக்கும் இரும்புக் கட்டியையோ பித்தளைக் கட்டியையோ ஒரு தராசுத் தட்டில் போட்டு அதை எவ்வளவு பலத்துடன் பூமிஇழுக்கின்றதோ அவ்வளவுக்குச் சரியாகும் வரையில் மறுதட்டில் சர்க்கரையைப் போடுகிறோம். சர்க்கரையைப் பூமி இழுக்கும் அளவும், வீசையென்று சொல்லும் கட்டையை பூமி இழுக்கும் அளவும் சரியாய் இருப்பதால் சர்க்கரையின் மாஸும் வீசையின் மாஸும் ஒரே அளவுதான். ஆகையால் பொருட்தொகுதியை நிர்ணயிக்கவேண்டுமானால் அதன் பளுவை அளந்துதான் Mass தீர்மானம் செய்வது வழக்கம்.

ஆர்-கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

மேன்மையாய்ப் பழிவாங்கினது.

அல்லது

உபர்டோவின் கதை.

—:o:—

பல வருஷங்களுக்கு முன்னர் இத்தாலியா தேசத்தில் உள்ள ஜினேவா என்னும் பட்டணம், அந்நகரத்துக் குடிகளாலேயே ஆளப்பட்டு வந்தது. அந்நாளில் நகரிலுள்ள கனவான்களுக்கும், சாதாரண ஜனங்களுக்கும் விரோதம் உண்டானபடியால், இரண்டு கக்ஷி ஏற்பட்டது.

ஜனங்கள் கக்ஷிக்குத் தலைவன் உபர்டோ. அவன் வெகு அற்பமான ஏழைக்குடியில் பிறந்தவன். ஆனால் அவன் அதிக கம்பீரகுணமும் புத்தி நுட்பமும் சாமர்த்தியமும் உடையவன். வியாபாரம்செய்து ஏராளமாய்ப் பொருள் சம்பாதித்தான். எல்லா மனிதரிடத்திலும் மிகுந்த அன்புடையவன். ஆகையால் ஜன சங்கத்துக்குத் தலைவனாகி அநேக நாள் சாதாரண ஜனங்களின் மனப்படியே நகரின் அரசாட்சி நடத்திவந்தான்.

ஜினோவாப் பிரபுக்களுக்கு உபர்டோவின் மேல் உண்டான கோபத்திற்கு அளவில்லை. பரம்பரையாய் பிரபுத்துவம் பெற்றிருக்கும் தாங்கள் எல்லாம் சும்மாவிருக்கவும், இந்த 'நேற்றையப்பயல்,' அதிகப் பிரஸங்கமாய் குடியரசின் தலைவனென்று தங்களை ஆளவும் நேர்ந்ததே என்று மனம் கொதித்தனர். கடைசியாகப் பிரபுக்களெல்லாரும் ஒன்றுசேர்ந்து தங்கள் ஐக்கியபலத்தால் குடியரசை முற்றிலும் மாற்றிவிட்டனர். உபர்டோவின் ஜனகக்ஷி பலமற்றதாயிற்று; முன்போலவே பிரபுக்கள் ஜினோவாவை ஆளத்தொடங்கினர்.

பிரபுக்கள் ஜயமடையவே தங்கள் எதிரிகளான ஜனங்களின் தலைவர்களைத் தொந்தரவுசெய்ய ஆரம்பித்தனர். ஜனங்களுக்கு முக்கிய சினேகிதனுயும் தலைவனுமிருந்த உபர்டோவை அவர்கள் சும்மா விட்டுவிடுவார்களா? உபர்டோவைச் சிறைப்படுத்தினார்கள், அவனைக் கள்வனென்றும், ஜனத்துரோகியென்றும் குற்றம் சாட்டினார்கள். இக் குற்றத்திற்காக அவன் சொத்தையெல்லாம் இராஜாங்கத்துக்குச் சேர்த்துவிட்டு, ஜினோவாவின்புறம் திரும்பிப்பாராமல் தேசாந்தரம் போய்விடவேண்டு மென்றும் உத்தரவுசெய்து விட்டனர்.

அப்பொழுது ஆடர்னோ என்னும் பிரபு நகரில் முதல் அதிகாரி. அவ்வதிகாரிதான், முற்கூறிய உத்தரவை உபர்டோவுக்குத் தெரியப்படுத்த வேண்டியவர். அவர் மகா அகங்காரமுடையவர். தான் பழைய பிரபுக்களின் வம்சத்தில் பிறந்தவர் என்கிற கர்வம் மனமுழுதும் குடிகொண்டவர். பிரபுக்களுக்கு சுபாவமாய் உள்ள மற்ற துர்க் குணங்களோடு, தான் இதுவரையில் ஜன அரசாட்சியின் கீழ்ப்பட்டிருந்த வருத்தமும் அவரின் மனத்தைச்சுடவே அவர் உபர்டோவைப் பார்த்து "நீ ஒரு அற்ப ஜாதியைச் சேர்ந்த கம்மாளன் மகன்! நீயன்றோ ஜினோவா நகரத்து பிரபுக்களை ஆளத் தலைப்பட்டு, தலைகீழ் விழுந்தாய்? இப்பொழுது உன்போன்ற துஷ்டனை யாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆயினும் உன்னை நாங்கள் ஒரு பொருட்டாக எண்ணவில்லை. எங்கள்மனநிரம்பிய கருணையால் உன்னை ஒரு தொந்தரவும் செய்யாமல் நீ முன் எவ்வளவு அற்ப நிலைமையினின்று மேற்கிளம்பினாயோ அதே நிலையில் ஒடுங்கி வீழும்படி, செய்து இருக்கிறோம்! 'துள்ளினமாடு பொதிசுமக்கும்' என்பதையும் மறந்தனைபோலும்! பேதாய்!! நீ இந்நகரின்புறமும் தலைவைத்துப் படுக்கக்கூடாது! தெரியுமா!!" என்று பலவாறுபேசி அவனுக்கு விதித்துள்ள தண்டனையைத் தெரியப்படுத்தினர்.

ஆடர்னோ சொல்லிய கடுஞ்சொற்கள் அக்கொடும் தண்டனையின் கொடுமையை அதிகமாக்கிற்று. மனம்பதைக்கும் உபர்டோவுக்கு இச்சொ

ற்கள் புண்ணில் வேல்பட்டதுபோல் இருந்தன. ஆயினும் உபர்டோ தண்டனை விதிக்கும் அதிகாரியைச் சிறிதும் அவமதிக்காமல் மிகவணக்கத்துடன் தண்டனையை அமைதியாய் ஏற்றுக்கொண்டான். ஆயினும் ஆடர்னே சொன்ன வார்த்தைகளும், அவர்சொன்னவிதமும் அவரது ஏற்றமும், உபர்டோவின் மனதைச் சுட்டபடியால், அவன் "ஐயா! உம்மைப்போலவே மனவெழுச்சியும், உணர்ச்சியும் உடைய ஒருவனைப் பார்த்து நீர் இத்தகைய வார்த்தைகள் பேசியதற்கு மனமாற விசனப்படுவதற்கு இனி ஒருக்கால் காரணம் ஏற்படும். அக்காலம் சீக்கிரம் வரும்படி சுவாமி கிருபைசெய்வாராக!!" என்று தன்னை யறியாமலே வாய்விட்டுச் சொல்லிவிட்டு, அதிகாரிக்கு உரிய வந்தனம்செய்து திரும்பினன். பிறகு தன் நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டு சிறிதும் மனங் கலங்காமல் (Naples) நேப்பில்ஸ் நகருக்குப் போகும் ஓர் கப்பலில் புறப்பட்டுவிட்டான்.

நேப்பில்ஸ் நகரத்தில் தனக்கு வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிப் பணத்தை வசூல் செய்துகொண்டு அற்ப திரவியத்துடன் ஓர் தீவில் போய் அமர்ந்தான். புத்திநுட்பமும் சாமர்த்தியமும், சுறுசுறுப்பும் உடையவர்கள் எவ்விடத்தில் இருந்தால் தான் என்ன? தனது யோக்கியதையாலும், வியாபாரத்தின் திறமையாலும் ஏராளமாய்ப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்தான். சில வருஷங்களுக்குள் உபர்டோதான் முன் ஜினேவாவில் இருந்ததைவிட அதிக செல்வவானானன். நேப்பில்ஸிலும் இன்னும் பக்கத்திலுள்ள மற்ற பட்டணங்களிலும் உபர்டோவை மேம்பட்டவர்களே கிடையாது. கருணையிலும் கம்பீரத்திலும் அவன் முதன்மையானவன் என்று எல்லாரும் கொண்டாடினார்கள்.

அக்காலத்தில், இப்பொழுது போலவே, அப்பிரிக்கா கண்டத்தின் வட பாகத்தில் (Tunis) 'டுனிஸ்' என்னும் நகரம் விசேஷமான வியாபாரஸ்தலம். டுனிஸ் நகரத்தார் உபர்டோ வாழும் தீவாரோடு அதிகமாய் வியாபாரம் செய்வதுண்டு. இன்னும் சில பட்டணங்களுக்கும் போவார்கள். ஆனால் ஜினேவாபோன்ற இத்தாலியா தேசத்து நகரத்தாருக்கும் டுனிஸ் நகரத்தாருக்கும் மிக்க பகையுண்டு. அதுபற்றி, பகைவர்களின் கப்பல்கள் வியாபாரத்தின்பொருட்டு தனியேசென்றால் அவற்றை எதிர்த்துக் கொள்ளையடித்து, மனிதர்களைச் சிறைப்படுத்துவது வழக்கம். அவ்வாறு சிறைப்பட்டவர்களை டுனிஸ் நகரத்துக்குக் கொண்டுபோய் அடிமைகளாக விடுவார்கள். மிகுந்த பணம் கொடுத்தால் ஒழிய அவ்வடிமைகளை விடமாட்டார்கள். இவ்வாறு டுனிஸ் நகரத்தாருக்கும் பகை நெடு நாளாய் இருந்துகொண்டே வந்தது.

உபர்டோ பேரும், பெருமையும் வாய்ந்து, வாழுநாளில்தான்வியாபாரத்திற்காக பல நகரங்களுக்குப் போவதுண்டு. ஒரு சமயத்தில் வழக்கம்போல் டுனிஸ் நகரத்துக்குப்போய் இருந்தான். அவ்விடத்தில் மிகுந்த பணக்காரனும், தன் சினேகிதனுமிருந்த ஒரு வர்த்தகனைப் பார்க்கப்போனன். அவன் வீட்டின் முற்றத்தில் ஒரு கிருஸ்துவ அடிமை வேலை செய்துகொண்டிருப்பதைக் கண்டான். அவ்வடிமை ஒரு சிறுவன்; மெலிந்த தேகமுடையவன்; அவனுக்கு பலமான சங்கிலிகள் போட்டு இருந்தன. அவன் தனக்கு இட்டவேலையைச் செய்யமாட்டாமல் தத்தளித்துக்கொண்டு இருந்தான். அம்மாதிரி முரட்டுவேலை அவன் என்றும் செய்திலனென்று பார்க்கும்பொ

மூதே உபர்ட்டோவுக்குத் தோன்றிற்று. வேலை செய்யும்போதே களைத்துப் போய்தான் கையில் பிடித்துள்ள ஆயுதத்தின்மேல் சாய்ந்துகொண்டு களைத்துப் பெருமூச்சுவிட்டான். கண்களினின்று நீர் தாரைதாரையாய் வழிந்தது. இதைப் பார்த்ததும் உபர்ட்டோ மனங்கரைந்து, இவன் யாரோவென்று பரிதாபப்பட்டு அவனுடன் இதாலியா பாஷையில் பேசினன். தன் தேச பாஷை காதில் கேட்ட மாத்திரத்தில் சிறுவன் நிமிர்ந்து ஆவலுடன் தான் ஜினோவாவைச் சேர்ந்தவன் என்று பதில் சொன்னான்.

உபர்ட்டோ, "அப்பா, நீ ஜினோவாவைச் சேர்ந்தவனா? எனக்கும் ஜினோவா நன்றாய்த்தெரியும், உன்பெயர் என்ன? சிறுவனே, நீ சிறிதும் கூசாமல் உன் தகப்பன் பெயரையும் நீ எக்குலத்தைச் சேர்ந்தவன் என்றும் என்னிடத்தில் அச்சமின்றிச் சொல்லலாம்" என்றான்.

சிறுவன், ஐயா, என்னைச் சிறைப்பிடித்து இப்பாடு படுத்துகிறவர்கள் என் குலத்தையும் அந்தஸ்தையும் பற்றி ஸந்தேகித்து என்னை விடுதலை செய்ய மிகப்பணம் கேட்கிறார்கள். ஆயினும் உம்மிடத்தில் உண்மை சொல்லி வாய்விட்டு அழுதான். உபர்ட்டோ கருணையுடையவனானகையால் அவன் கண்களிலும் நீர் நிரம்பிவிட்டது, உடனே உபர்ட்டோ "உன் தகப்பன் பெயரைச்சொல் குழந்தாய்," என, சிறுவன் "என் தகப்பன் பெயர் ஆடர்னோ—" என பதில் சொல்வதற்குள் உபர்ட்டோ "ஆ! ஆடர்னோவா!" என்றுபதறி, உடனே தன் ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு மனத்துள் "நன்று! கடவுள் நமக்கு நல்லசமயம் கொடுத்தார். எனக்கு ஆடர்னோ செய்த பழிக்குத் தக்கபடி மேன்மையாய்ப் பழிவாங்குகிறேன்." என்று எண்ணிக் கொண்டான்.

உடனே அச்சிறுவனிடம் விடை பெற்றுக்கொண்டு டுனிஸில் கொள்ளைக் கப்பல் தலைவன் எவ்விடமிருக்கின்றானென்று விசாரிக்கப் புறப்பட்டான். அவனே அடிமைகளுக்கு உடையவன், அவனைக்கண்டு "சிறிய அடிமையாகிய ஆடர்னோவை என் வசப்படுத்திக்கொள்ள என்னதிரவியம் உனக்குக் கொடுக்கவேண்டும்" என்று வினவினன். அக் கப்பற் றலைவன் "நீர் கேட்கும் சிறுவனுக்கு மிக்கவிலை கொடுக்கவேண்டும், அற்பவிலைக்கு அவனை உம்வசம் ஒப்புவிக்கமுடியாது. ஐயாயிரம் ரூபாய்க்குக் குறைந்தால் நான் சம்மதிக்கமாட்டேன். நீர் மேல்பேச வேண்டியதும் இல்லை" என்றான். உபர்ட்டோ உடனே ஐயாயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு தன் சேவகனைப்பார்த்து ஒரு குதிரையையும் புதிய ஆடைகளையும் கொண்டுவரும்படி உத்தரவு செய்தான்.

உபர்ட்டோ திரும்பிச் சிறுவனிடம் வரும்பொழுது அவன் முன்போலவே கஷ்டத்துடன் வேலைசெய்து கொண்டிருந்தான், அவனிடம் நெருங்கி "மகனே நீ இந் நிமிஷம் முதல் அடிமை அன்று. உன்னிஷ்டப்படி சுயேச்சையாயிருக்கலாம்." என்று சொல்லிக்கொண்டே, அவனைப் பிணித்திருந்த சங்கிலிகளைத் தானே கழற்றினன்; அதற்குள் தன் சேவகன் கொண்டுவந்த புது உடைகளையும் அணியச்செய்து குதிரைமேல் ஏற்றி வைத்தான்.

இதையெல்லாம் பார்த்ததும் சிறுவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நிகழ்ந்ததெல்லாம் கனவென்று எண்ணினன்; அவன் மனம் சலித்தது; இப் பரபரப்பில் தனக்குப் பேருபகாரம் செய்த உபர்ட்டோவுக்கு வந்தன உப சாரங்கூட சொல்லத்தெரியவில்லை. உயிரற்ற பாவையைக் குதிரைமேல் உட்காரவைத்தது போல் உணர்ச்சியற்று குதிரைமேற் சென்றான். உபர்ட் டோவின் வீட்டில் இறங்கி அவனுடன் சமமாய் உட்கார்ந்து சாப்பிடும்போ துதான் உண்மையாகவே அடிமை அன்று என்பதும், தன் னதிர்ஷ்டவசத் தால் இந்த தர்மபிரபுவின் சிநேகம் கிடைத்தது என்பதும் தெளிவாயிற்று. சிலநாள் டியூனிஸில் கழித்து தன் வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு இவ்விளங்குமாரனோடு தன் தீவுக்குப் புறப்பட்டான். சிறுவனுடைய அமை தியான குணத்தையும் கம்பீரத்தையும் பொறுமையையும் பார்த்து உபர் டோ அதிக சந்தோஷப்பட்டான். தன்னூர் போய்ச்சேர்ந்ததும் அவனைச் சிலநாள் தன் வீட்டிலேயே வைத்திருந்து தன் அருமைச் சிநேகிதன் மகன் போல் அதிக அன்போடும் மரியாதையோடும் அவனை உபசரித்தான். சில நாளான பிறகு ஆடர்னேவை ஜினேவாவுக்கு க்ஷேமமாய் அனுப்பத்தக்க சமயம் வாய்த்தது. அவன் பிரயாணத்திற்கு வேண்டிய சௌகரியங்க ளெல்லாம் செய்ததுமல்லாமல் வழியில் அவனுக்குத்துணையாக ஒரு சேவ கனையும் அனுப்பினன். தவிர சிறுவன் புறப்படும்போது அவன்கையில் ஒரு பை நிரம்பப் பொன் நாணயமும் ஒரு கடிதமும்கொடுத்து "என் அரு மை இளையவனே! என்னுடைய இவ்வெளியகிருகத்தில் உன்னை இன்னும் சில நாள் சந்தோஷமாய் வைத்துக்கொண்டிருக்க நான் ஆசைப்படுகிறேன் ; ஆயினும் நீ உன்னுடைய சொந்த நகரத்திற்குப்போய் உன்னுடைய பெற் றோரையும் நண்பரையும் காண்பதற்கு ஆசைப்படுகிறாய் என்று எனக்கு நன்கு விளங்குகின்றது! அவர்கள் உன்னைப்பார்த்து ஆனந்தமடையாதபடி உன்னை இவ்விடத்திலேயே பலநாள் நிறுத்துவது கொடுமை யென்று என் புத்திக்குப்படுகிறது. உன்வழிச்செலவுக்கு இப்பையை வைத்துக்கொள் ; இக்கடிதத்தை உன்தகப்பனரிடம் கொடு, நீ குழந்தையாயிருந்தபடியால் என்னை மறந்திருக்கிறாய்; ஆனாலும் உன்தகப்பனர் ஒருக்கால் என்னை சற் றே ஞாபகம் வைத்திருப்பார் என்று எண்ணுகிறேன். மகனே ! போய்வா. நான் உன்னை என்றும் நினைத்திருப்பேன். நீயும் என்னை மறவாய் என்று நம்புகிறேன்;" என்று கண்ணீர் ததும்ப சிறுவனைக்கட்டி முத்தமிட்டான்.

சிறுவனான ஆடர்னேவின்மனம் எவ்விதம் இருந்ததென்று நான்சொல் லமுடியாது. செய்நன்றியின் நினைவாலும், உபர்ட்டோவின்மேலுள்ள அன் பாலும் அவனதுமனம் நிரம்பி, உடல்பூரித்து உபசாரவார்த்தைகளைத்தங்கு தீடையின்றிப் பொழிந்தான். பிறகு இருவரும் மனம் ஆற்றாது 'கண்ணும் கண்ணீருமாய்ப்' பிரிந்தனர்.

அச்சிறுவனும் யாதொரு இடையூறுமின்றி ஜினேவாவந்து சேர்ந் தான். பிள்ளையையிழந்த பெற்றோர்களுக்கு அவனைத்திரும்பக்கண்டதும் உண்டான மனக்களிப்பு எவ்வளவு இருக்குமென்று நீங்களே பாவித்துக் கொள்ளலாம்! முதலில் அவர்கள் தம்மகன் போனகப்பல் மூழ்கிவிட்டபடி யால் அவரும் இறந்தனனென்று நினைந்தார்கள். சிலநாட்சென்றபின்னர் அவன் டுனிஸில் அடிமையாயிருக்கும் சங்கதிதெரிந்து மிகவும் பதைத்து மனமழிந்து ஏங்கியிருந்தனர். ஆகையால் மைந்தனைக்கண்டபோது பொங்

கிய ஆனந்தம் சிறிது அடங்கின உடனே தகப்பனாகிய ஆடர்னோ "குழந்தாய் என் செல்வக்குமாரனை என் கையில்கொண்டுவந்து ஒப்புவித்த இப் பேருபகாரம் செய்த மகா தர்மவான்யாரோ! எந்த தயாளு இந்த உபகாரம் எனக்கு செய்தார்?" எனக், குமரன் "அப்பா உமக்கு அவ்விவரமெல்லாம் இக்கடிதத்தால் விளங்கும்" என்று கடிதத்தை நீட்ட அதைவாங்கிமுத்திரை உடைத்துப்படித்தார் ஆடர்னோ! அதில் "அற்பநிலைமையில் உள்ள கம்மாளன் மகன் ஒருவன் ஒருக்கால் நீர் அவனைத்தூஷித்த பொழுது 'நீர் இத்தகைய வார்த்தைபேசியதற்கு மனமாற வருந்தவேண்டிய காலம்வரும்' என்று சொன்னான் அல்லவா? அவன் சொல்லியபடியே இப்பொழுது தக்க சமயம் வாய்த்ததுபற்றி அவன் சந்தோஷப்படுகிறான். ஏனெனில் கர்வமுள்ள பிரபுவே! உம் அருமைமகனை அடிமைத்தொழிலிலிருந்து விடுவித்து உம்மிடம் சேர்ப்பித்தவன், உங்களால் தேசப்பிரஷ்டமடைந்த உபர்ட்டோ என்று எழுதியிருந்தது.

ஆடர்னோவின்கையினின்று கடிதம் நழுவிவிழுந்தது; வெட்கத்தாலும் மனவருத்தத்தாலும் முகத்தை இருகரத்தாலும் மூடிக்கொண்டான். சிறிய அடர்னோவோ உபர்டோவின் நற்குணங்களையும், அவனது தர்மசிந்தையையும், கம்பீரத்தையும், தகப்பன் போன்று தன்னைக் காப்பாற்றியதையும் பற்றி வாய் ஓயாமல் புகழ்ந்தான்.

விலைமதிக்க வொண்ணா இப்பேருபகாரத்திற்கு தானும் தன்னால் முடியுமளவு உபர்ட்டோவுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று எண்ணினான், ஆடர்னோ! தன்போன்ற மற்றப்பிரபுக்களிடம் போய் உபர்டோவைப்பற்றிப்பேசினதால் அவனுக்கு விதித்திருந்த தண்டனையைமாற்றி மறுபடி ஜினோவாவுக்கு வரும்படி அவர்கள் உத்தரவுகொடுத்துவிட்டனர். ஆடர்னோ இவ்விஷயத்தை உபர்டோவுக்குத் தெரிவித்ததுமல்லாமல் தன் உபர்ட்டோவுக்கு மனமாற கடமைப்பட்டிருப்பதாகவும் தனக்கு உபர்ட்டோ ஆப்த சினேகிதனாய் இருக்கவேண்டுமென்றும், அவனுடைய மேன்மைக்குணமும் தர்மசிந்தையும் மிகச்சிறந்தனவென்று தனக்கு நன்றாய்த்தெரிந்த தென்றும் விளக்கமாய் எழுதினான். உபர்ட்டோ ஜினோவாவுக்கு மறுபடியும் திரும்பி வந்து எல்லாராலும் நன்குமதிக்கப்பட்டு தன்வாழ் நாட்களை அமைதியாய்க் கழித்தான்.

ஆர்-கே. சுவாமி, பி-ஏ. எல்-டி.

கூடையும், அதன் உபயோகமும்.

கூடை வெகு பிரயோஜனம் உள்ளது. கடைக்குப்போய், காய்கறி வாங்கினால், அவற்றைப் போட்டுக்கொண்டு வரவும் கூடை ஒன்று வேண்டியிருக்கிறது. வீட்டில் எதாவது ஒன்றைப் போட்டுவைப்பதும் கூடையிலே. இன்னும் அது எவ்வளவோ வேலைக்கு உதவும். கூடை இல்லாத வீடும் உண்டா? இல்லை! இல்லை! அது சர்வ சாதாரணம்.

சரி, இப்படி, ஒரு பொருளை அனேகர், வெகு காரியங்களுக்கு உபயோகப் படுத்த வேண்டுமானால், அது எப்படிப் பட்டதாயிருக்கவேண்டும்?

முதலாவது, அது குறைந்த விலையில் இருக்கவேண்டும். விலை சரசமானல்தான், எல்லாரும் அதை வாங்கக் கூடும். உயர்ந்த விலையுள்ள எதையும் எல்லாராலும் வாங்க முடியாது. இரண்டாவது அதன் பிரயோஜனம் அதிகமாய் இருக்கவேண்டும். சொற்ப விலைக்குக் கிடைப்பதானாலும் அதன் உபயோகம் மட்டாயிருந்தால் அதை அனேகர் வாங்கமாட்டார்கள். விலை கொஞ்சம் ஆனல் என்ன? நமக்கு வேண்டாததை நாம் ஏன் வாங்கப் போகிறோம்?

இப்படி, விலை சரசமானதும், பிரயோஜனம் அதிகம் உள்ளதும் ஆன பொருள்களில் கூடை ஒன்று. அதைப்போல் உபயோகமுள்ள பொருள், அவ்வளவு குறைந்த விலைக்கு வேறு ஒன்று கிடையாது. அரை அணவுக்கு ஆறுபடி பிடிக்கும் கூடை. அதைவாங்கி அனேககாரியங்களுக்கு உபயோகப் படுத்துகிறோம். "இங்கே உள்ள நெல்லை எடுத்து அங்கே கொட்டு" என்றாலும் "எங்கே! ஒரு கூடை" என்கிறோம். "இந்தப் பருப்பை அந்த வீட்டுக்குக் கொண்டுபோ" "ஒரு கூடையில் வாரு" "அம்மா! கடைக்குப்போகலாமா?" "சரி. ஒரு கூடை எடுத்துக்கொள்." இத்தனைக்கும் கூடை ஆகும்.

"சாதாரணக் கூடைக்கு என்ன அத்தனை மகிமை? அது கனம் கூட இல்லை. ஆம்! ஆம்! கனம் இல்லாததினல் தான் அது அவ்வளவு உபயோகம் உள்ளதாய் இருக்கிறது. கனமான கூடை காரியத்துக்கு ஆகாது அல்லவா? கூடையில் போடும் சாமான்களைத்தான் சுமக்கிறோம். கூடையையும் - கனமானல் - சுமப்போமா! உப்பு மூட்டை சுமந்த கழுதையின் பேச்சைக்கேட்டு கம்பளிசுமந்த கழுதை பட்ட பாடுபோல் ஆகும் கூடையைக் கனமானதாகச் செய்துகொள்வது. ஆகையால் கூடை எவ்வளவுக்கு எவ்வளவு கனம் இல்லாமல் இலேசாய் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு நல்லது. ஆனல், கூடை இலேசாக மாத்திரம் இருந்தால் போதாது; பலமாயும் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் பளுவான பண்டம் ஒன்றை அந்தக் கூடையில் வைக்கமுடியாது. கூடை உறுதியாய் இருந்தால்தான் இரும்பு சாமான்களையும் அதில் வைத்து வைக்க, எடுக்க, ஆகும். வெகுநாளைக்கு நிற்கும். சீக்கிரம் தேய்ந்து போகுமானல் சுகம் இல்லை. அப்போது அதன் விலை அரைக்காசாய் இருந்தாலும், அதை அடிக்கடி வாங்க வேண்டி வருமாகையால் அது விலை உயர்ந்த தாய்விடும். இப்படி, கூடை, கனம் இல்லாததாயும், வெகுநாள் நிற்பதாயும் இருப்பதோடு கூட அது நமக்குத் தேவையான பருமனிலும் உருவத்திலும் உள்ளதாய் இருக்க வேண்டியது அவசியம்—வட்டமாகவோ, சதுரமாகவோ, தட்டையாகவோ, நீளமாகவோ, எப்படியோ வேண்டியபடி இருக்கவேண்டும்.

இனி, இவ்வளவு நல்ல கூடை எதனல் செய்யப்படுகிறது? சாதாரணமாய், மூங்கில், பிரம்பு, பனைநார் முதலானவற்றால் செய்யப்படுகின்றது. இவற்றைவிட்டு வேறு பொருள்களாலும் வேறு தேசங்களில் கூடைகள் முடைகிறார்கள். எதனல் ஆனலும் என்ன! அது சுலபமாயும் ஏராளமாயும் அகப்படுவதா யிருக்கவேண்டும். பின்னும் அது உறுதியாயும் கனம் இல்லாததாயும் இருப்பதோடு திருப்பிய பக்கம் வளைவதாகவும் இருக்கவேண்டும்; வளைக்கக் கூடியதானல்தான் அதைக்கொண்டு நாம் நமக்குப் பிரியமான உருவத்தில் கூடை முடையலாம்.

"கடைசியாக, முடைதல்" ஒன்றையே தெரிந்தவன் வேறு அனேக சாமான்களையும் செய்யலாம்; ஆனால் கூடை முடைவதி லிருந்துதான் ஆரம்பிக்கவேண்டும். அது செய்யத் தெரிந்துகொண்டபின்,—அதுவோ வெகு சுலபம். வெகு சீக்கிரமாயும் கற்றுக் கொள்ளக் கூடியது—பிரம்பு, மூங்கில் இவற்றால் பின்னி ஆகும், குருச்சி, சாய்ப்புக்குருச்சி, மேஜை, தொட்டில், வண்டிப்பீடம் முதலிய அனேக உபயோகம் உள்ள சாமான்களைச் செய்ய, நன்றாய்ப் பழகிக்கொள்ளலாம். முடைதலுக்கு பணம் அதிகம் வேண்டியதில்லை. கொஞ்சம் முதல் இருந்தால் போதும். கஷ்டமும் அதிகம் இல்லை. கைவேலைதானே." வீட்டிற்குள் இருந்துகொண்டே செய்து முடிக்கலாம். ஏழைகள் பலருக்கும் ஏற்ற பிழைப்பு. குருடர்களும் கூடை முடைகிறார்கள் என்றால் அது சுலபமான வேலை என்று சொல்லவும் வேண்டுமோ.

கோவை. வீ. சிதம்பரவுபாத்தியாயர்.

ஜீவதத்துவவிளக்கம்.

பல்லிகள்.

ஊர்வன:—(Reptile) ஊர்வனவாகும் ஜெந்துக்கள் யாவும் பல்லியென்றும், பாம்பென்றும், ஆமையென்றும், முதலையென்றும் பல வகுப்பின. ஈங்கு சில சொல்லுவான் எடுத்துக்கொள்ளப்பட்டது பல்லியென்னும் பிரிவாம்.

நம்மில்லுள் காணும் சிறு பல்லி, மரங்களில் வசிக்கும் ஓணான், மலைநாட்டிலிருக்கும் உடும்பு முதலியன பல்லியென்னும் பொதுப் பெயரின.

சுமார் 1500 விதப் பல்லிகள் உண்டென்பார்கள். பல்லிகள் மிகக் குளிர்ந்த பிரதேசங்களில் அகப்படா. சம சீதோஷ்ணமண்டலத்தில் (Temperate region) அகப்படும்பல்லிகள் மழைகாலத்து ஆகாரமின்றிக் கோடைக் காலம் வரையில் மண்ணிற்குள் வசிப்பனவாம். உஷ்ண மிகுதியுமுள்ள நமது போன்ற நாடுகளில் பல்லிகள் அபரிமிதமாய் உண்டாம்.

பல்லிகள் பலவும் மாம்சபட்சணிகளே. சிறியவை எறும்பு, ஈ முதலியவற்றையும், பெரியன எலி, சிறு பறவை, மீன், முட்டை முதலியவற்றையும் தின்னும். சில மட்டுமே பூர்வீக பிராமணர்களைப் போல் சாகபட்சணிகளாம்.

பல்லிகள் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பன. 2 முதல் 40 வரையில் முட்டைகள் இடும்.

முட்டைகளைப் பறைவைபோல் பாதுகாப்பது இல்லை. சூரியனுடைய வெப்பத்தினாலேயே முட்டையினின்றும் குஞ்சு புறப்படும். இரண்டொரு விதப் பல்லிகள் மாத்திரம் முட்டையிடாமல் குஞ்சுகளைப் பெறுவனவாம்.

விஷந்தீட்டும் பல்லி ஒன்றுதானுளது. அது மிகக் கோரமாயிருக்கும்; மெக்ஸிக்கோ (Mexico) என்னும் அமெரிக்க நாட்டிலகப்படும்.

சிறு பல்லிகள் Geckos:—இவை தாம் பல்லிகள் குழாத்தில் மிகச்சிறியவை. இவற்றுள் சில ஒன்றரை இரண்டு அங்குலத்திற்குமேல் வளருவனவல்ல. அவற்றை யாராவது பிடித்தால் வாலைக்(ransom)கொடுத்துவிட்டு ஓட்டமாய்த் தப்பி யோடிவிடும். வாலிழந்த பல்லி வாலிழந்த நரியைப்போலாது சீக்கிரத்தில் மற்றொரு வாலை வளர்த்திக்கொள்ளும். சிற்சில சமயங்களில் இரண்டு வாலுண்டாவது முண்டு. அது மிக்கவியப்பை உண்டாக்கும்.